www.padippakam.com

# மனங்களில் மரணிக்காதவன்



'நடிப்பிசைக் காவலன்'

கிறகெறி தங்கராஜா அவர்களின்

31ம் நாள் அஞ்சலி மலர்

05.02.2000

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நடிப்பிசைக் காவலன்

## அமரர்

# கிறகெறி தங்கராஜா



தோற்றம்
02.08.1943

மறைவு
06.01.2000

படிப்பகம்

www.padippakam.com

# ஆழ்ந்த அனுதாபங்கள்!

மறைந்த கலைஞன் கிறகெறி அண்ணா அவர்களின் மறைவில் துயருறும் அவரது குடும்பத்தினர் மற்றும் கலை-இலக்கிய நண்பர்களின் துயரத்தில் நாம் பங்கேற்கின்றோம்.

கலைத்தாகம் கொண்ட ஒரு மனிதனாக இறுதிவரை வாழ்ந்த கிறகெறி அண்ணா அவர்களின் பல்வேறு படைப்புக்களை பிரான்சில் இடம்பெற்ற தமிழீழ தேசிய நிகழ்வுகளில் நாம் கண்டுள்ளோம். 'அழகான அந்தப் பனைமரம்" என்ற மண்மணம் கமழ்ந்த பாடலை அவர் பாடிய வேளைகளில் நாட்டுக்கூத்து வடிவில் தமிழீழ தேசிய எழுச்சியை அவர் படைக்க முற்பட்ட வேளைகளிலும் அந்தக் கலைஞனின் ஆத்மார்த்தமான கலைத்தாகம் வெளிப்பட்டது. புகலிட தமிழீழ கலை - பண்பாட்டுத் தளத்தில் கிறகெறி அவர்களின் முயற்சிகளும் பதிவு பெறும்.

நன்றி!

பொறுப்பாளர்
தமழீழ விடுதலைப் புலிகள் - பிரான்ஸ்
01.02.2000



படிப்பகம்

www.padippakam.com

# கலைவெறியன் தங்கராசாவே அமைதியாய் தூங்கு!

ஈழத்தின் நாட்டுக்கூத்து விற்பன்னர்கள் நடிகமணி வைரமுத்து, பூந்தான் ஜோசேப் ஆகியோரின் பாசறையில் வளர்ந்தவர் அந்தோனிப்பிள்ளை, இனுவில் பஞ்சலிங்கம், டிங்கிரி சிவகுரு, பேரம்பலம்... என்று பல கலைஞர்களுடன் நடித்த பெருமைக்குரியவர் கிறகெறி தங்கராசா என்று புகழ் பாடுவதை விட நமது நிஜ வாழ்க்கையில் - நாம் நேரடியாக கண்டுகொண்ட - கலையை மனதார நேசித்த - கலையையே சுவாசித்த - ஒரு கலைவெறியனை, கலைப்பித்தனை நாம் - தமிழீழம் இழந்துவிட்டதாகவே நான் கருதுகிறேன்.

ஒரு கலைப்பித்தனை மட்டுமல்ல - போட்டியும் பூசலும், பொறாமையும், நீ பெரிது - நான் பெரிது என்று வாழ்வு நடக்கும் புலம்பெயர் கலைவாழ்வில் மனித நேயமுள்ள ஒரு 'மனிதனை" நாம் இழந்துவிட்டதாகவே நான் கருதுகிறேன்.

இவரின் முன்னால் இருந்த கலைப்பட்டங்களை கணக்கிட்டு கிறகெறியை நான் மதிக்கவில்லை. நிஜமான கலையாசிகனாக இவரை நான் கண்டேன். இதனால் மலரும் தமிழீழத்தின் - தமிழ் அரசின் - ஆஸ்தானக்கலைஞராக இவரைப் பிரகடனப்படுத்த வேண்டும் என்று 1993ல் இவரது வெள்ளிவிழா நிகழ்வின் எனது தலைமையுரையில் வெளிப்படுத்தினேன். மன்னர் ஆட்சிக் காலங்களில் புலவர்களை ஆஸ்தானப் புலவர்களாக நியமித்து - பாடவைத்து தங்கக்காசுகள் வழங்கி கலைகள் ஊக்குவிக்கப்பட்டதை நாமறிவோம். இந்த ஏழைத் தங்கராசாவும் சக கலைஞர்களை ஊக்குவிக்க தங்கப்பதக்கங்கள், பட்டம் பதவிகள் கொடுத்து ஊக்கம் தந்ததை நான் இங்கு நினைவுகூர்கின்றேன். நமது தாய் மண்ணின் விடுதலைக்காக ஐரோப்பிய புலம்பெயர் மண்களில் நடந்திருக்கக்கூடிய தமிழீழ தேசிய எழுச்சி விழாக்களிலும் கடந்த சுமார் இருபது வருடங்களாக இவர் காட்டிய - செலுத்திய பங்களிப்புக்கள் என் அவாவுக்கு உந்து சக்தியாக அமைந்து - அது ஓரளவு மேலொப்பம் இடப்பட்டுவிட்டதாகவே நான் கருதுகிறேன். புகலிட தமிழீழ கலை - பண்பாட்டுத் தளத்தில் கிறகெறி தங்கராசாவின் நிகழ்ச்சிகளும் பதிவு பெறும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரான்ஸ் கிளை அறிவித்திருப்பது கிறகெறி தங்கராசா கலைக்காக தன்னை அர்ப்பணித்ததற்கு கிடைத்த பரிசு என்றே சொல்லலாம்.

தான் மட்டுமல்ல தன் பிள்ளைகளையும் மேடைகளில் நடிக்கவைத்து தன் கலைவெறியை வெளிக்காட்டிய பெருமைக்குரியவர் கிறகெறி, கலைஞனாக, இசைஞனாக, அதற்கு மேலாக மனித நேயம்

படிப்பகம்

www.padippakam.com

உடையவராக இவர் வாழ்ந்தார் என்பதற்கு இவரது இறுதிக் கிரியையின்போது கூடிய மக்கள் தொகையும் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக கொட்டும் பனிக்குளிரையும் தாங்கி அவர்கள் அங்குவிட்ட கண்ணீரும் சான்றுபகரும்.

நடிப்பிசைக்காவலர், கானக்குயில், கலைக்கோயில் கலைச்சுடர், கலைஞானி தங்கராசாவே நீ மடியவில்லை. உன்னை அறிந்த ஒவ்வொருவர் மனதிலும் நீ மறக்க முடியாதவனாகி விட்டாய் - அமைதியாய் தூங்கு!

பத்திரிகையாளர்
எஸ்.கே. காசிலிங்கம்
'தமிழன்" ஆசிரியர்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழர் கலை பண்பாட்டுக்கழகம்-பிரான்ஸ்
**ASSOCIATION ARTS ET CULTURES DES TAMOULS - FRANCE**

திருமதி டேவிட் கிறகெறி தங்கராஜா குடும்பத்தினர்க்கு,

தமிழ் உறவுகளுடன் நின்று கலைப்பயணம் மேற்கொண்ட கலைப்புத்திரன் திரு.டேவிட் கிறகெறி தங்கராஜா அவர்கள் இன்று எம்மிடம் இல்லை. அந்த கலைஞனின் இழப்புக்கேட்டு நாங்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம். கலைஞனின் பிரிவினால் ஏற்பட்ட துயரை அவரது குடும்பத்தினருடன் நாமும் பங்கெடுத்துக்கொள்கிறோம்.

நன்றி!

செ. பாஸ்கரன்
பொறுப்பாளர்
கலைபண்பாட்டுக்கழகம்



படிப்பகம்

www.padippakam.com

# காலங்கள் வாழ்த்தும் காவியமானவன்!

அருமைத் தம்பி தங்கராஜனே! எனை என்றும் "அத்தார்" என அழைப்பவனே, உன் விரல்கள் அத்தனையும் இணையும் போது அன்பையும் அரவணைப்பையும் காண்கிறேன். உன் "சுட்டுவிரலை" நீ நீட்டும் போது, அங்கே அர்த்தமுள்ள ஆர்ப்பரிப்பையும் காண்கிறேன்.

எந்நிலையிலும், உன் நிலை மாறாதவன் நீ! காற்றாடியாக காலங்கள் சுழன்றாலும், உன் எண்ணங்கள் என்றென்றும் நேர்வழி காணும், உன் சிந்தனைகளும் மாறாது நிற்கும்.

எந்த விருதுக்கும் சொந்தக்காரன் நீ! உன்னால் நீ பெற்ற அனைத்து விருதுகளும் பெருமையடைகின்றன! உன் குடும்பமே ஒரு கலைக் குடும்பம் ஐயா! சமூக நாடகமா, சமய நாடகமா, சரித்திர நாடகமா, இசை நாடகமா, இல்லை ஏன் எமது மரபு வழி வந்த வடமோடி, தென்மோடி நாட்டுக் கூத்தா அத்தனையிலும் கால் பதித்து அசத்தியவன் நீ. காலங்கள் வாழ்த்தும் காவியமானவன் நீ!

இனிய நண்பனே தங்கராஜன்! எனது "முகத்தார் வீட்டுப் பொங்கலுக்கு மங்கள விளக்கேற்ற இருந்தாயே". நித்திய விளக்காய் முன்சென்று விட்டாயே, ஏன்?! காலனை என்னால் மன்னிக்கவே முடியாது. மன்னிக்கவும் மாட்டேன்! காரணம் காலனே, என்னை இருமுறை மன்னித்த குற்றத்துக்காக!

இறைவன் மனிதனைப் படைத்து, பூமிக்கு அனுப்பும் போது ஒன்று கூறி வைத்தானாம், "மகனே, உன்னை மனிதனாக அனுப்புகின்றேன். நீ திரும்பி வரும் போது தெய்வமாக வா" என்று! கலை தெய்வீகம் என்றால், நீயும் தெய்வப்பிறவி ஐயா!

என்றென்றும் உன் நினைவில்
"முகத்தார்" எஸ். ஜேசுறட்ணம்

படிப்பகம்

www.padippakam.com

# உன்னை எண்ணி ஒரு பாசக்குரல்
# உன் அன்பை இரைமீட்கும்
# ஒரு நேசக்குரல்

ஓ கலைஞனே!
எங்கள் முற்றத்தை எல்லாம் இசையால் நிரப்பிய இசைஞனே
எங்கள் மனங்களை எல்லாம் அன்பு மழையால் நனைத்த கலைஞனே
எங்கோ கோழி கூவிற்று
விடிந்தது
இது நித்திய நியதி
உனக்கென்ன நடந்தது
நம்மை மறப்பதற்கு
இது என்ன நியதி

கலை உபாசகனே
கனவுகள்
கற்பனைகள்
ஆசைகள்-
எனக் கலைக் காதலுடன் வாழ்ந்தவனே
உன் கனவுக் கதைகள் கூட நமக்குச் சுவைதான்
உன் கலைத் தேடலை
வேகம் என்பதா
வெறி என்பதா
தாகம் என்பதா
தவிப்பென்பதா
உன் திடீர்ப் பயணம் உனக்கு முன்பே அறிவுறுத்தப்பட்டதா?
அதனால்தான் கலை படைப்பதில் தொடராய்த் துடித்து வடித்தாயா?

கலைப்படைப்பாளியே!
கூத்து
இசை நடனம்
வசன நாடகம்
என வகைவகையாய் யாத்து-கோத்து நம் ரசனையை
சேர்த்து வளர்த்தவனே
எங்கே போய் விட்டாய்
இந்த உழைப்பை
இனி எங்கு தேடுவோம்

படிப்பகம்

பண்பாளனே!
நீ மட்டும் பட்டங்கள் பெற்றவனல்ல
நீ பட்டம் சூட்டியவர்கள் எத்தனைபேர்
மனம் திறந்து பாராட்ட
மற்றவர் ஆற்றலை ரசிக்க
மாசற்ற மனம் வேண்டும்
அது உன்னிடத்தே ஊற்றாகப் பெருகியதே
எப்படி?
அடுத்தவர் திறமை கண்டு பொறுக்காத எங்களுக்கு
அதைச் சொல்லி விட்டுப் போ
நீ போகும் வழிக்கு நம் மனம் மலர் தூவும்

தமிழ் நெஞ்சனே!
உன் அன்பு மனம்
உன் பாசப் பேச்சு
உன் நேச நெஞ்சம்
உன் கலைத் தேடல்
நமக்கு வழி காட்டும்
நாம் சேர வேண்டிய எல்லைகளை
நம் தமிழீழ மண்ணின் கலைச் செறிவுகளை
உலகமெங்கும் பதிக்க அது துணை நிற்கும்
மலரப்போகும் நம் மண்ணுக்கு மாலை சூட்டும்

ஓ கலைக்குயிலே!
ஐரோப்பிய மேடைகள் அழுகின்றன
மேல் ஸ்தாயியில் மேடைகள் நனைத்த இன்னிசை வாணனே
உன் தேன் குரல் காற்றோடு கலந்து நம் காதுகளில் கம்பீரமாக ஒலிக்கட்டும்
தமிழ் பேசும் மண்ணெல்லாம் சிலிர்க்கட்டும்
சிறக்கட்டும்

ஓ நடிப்பிசைக் காவலனே!
மனிதனுக்காய் பாடியது போதும்
மனதுக்காய் பாடியதும் போதும் என
உலகை ஆளும் இறைவனுக்காய்ப் பாடப் போய் விட்டாயா
மண்ணுலகை இசை மழையால் நனைத்தவனே
மற்ற உலகங்களையும் உன் இசையால் நிரப்பப் போய் விட்டாயா!
போய் வா நம்மவனே

ஓ கலைஞானியே!

கலைக்கோயிலின் தலைமகனே!
உன்னுடன் கலை படைத்த தம்பிமாருக்கு
நாம் என்ன பதில் கூற
அவர்தம் உள்ளம் துடித்து அழ
திசை தெரியாது விம்மி விழ
நம் ஆறுதல் மொழி என்ன சொல்ல
உன் அன்பு மனையாள்
ஆருயிர் மக்கள்
உடன் பிறப்புக்கள்
உறவுகள்
உயிர்கள்
நண்பர்கள்
நல்லவர்கள்
கலைஞர்கள்
அன்பர்கள்
இன்னும் திகைப்பிலிருந்து மீளவில்லை
சிந்தக் கண்ணீர் இன்னும் சேரவில்லை

ஓ கலைவித்தகனே!
இது என்ன விதியா
இல்லை இது இறைவன் சதியா
ஆசை காட்டி
அன்பு காட்டி
பாதியிலே தட்டிப் பறிக்கும்
ஏமாற்று வித்தையா
தவறு செய்பவனுக்கு தண்டனை உண்டெனின்
எங்கள் இதயத்தைப் பறித்த இறைவனுக்கு
என்ன தண்டனை
சொல்லி விட்டுப் போ


கலை நெஞ்சனே!
பிறப்பெதற்கு நமக்கு
பேணி வளர்ப்பெதற்கு நமக்கு
உற்றார் அணைப்பெதற்கு நமக்கு
ஊரார் துணையெதற்கு நமக்கு
ஓடி உழைப்பெதற்கு நமக்கு
உயிர் எப்போ பிரியுமென உணராத நமக்கு
அதை ஆழ உரிமையில்லாத வாழ்வெதற்கு நமக்கு
நீ எமக்கு உதாரணம்
உன் நிலை எமக்கு நிதர்சனம்

www.padippakam.com

உன் கல்லறை வெள்ளையடிக்கப்படும்
கலங்கரை விளக்காக
உன் கால்த் தடங்கள் கலைஞனுக்கு வழிகாட்டும்

ஓ கலைப்பித்தனே!
உன் உடல் நம்மை விட்டுப் பிரியலாம்
உயிரை
உன் கலைத் திறனை
உன் உண்மை அன்பை
உன் பாசக் குரலை
உன் நேச நெஞ்சை
எம்மிடமிருந்து பறித்து விடாதே
அதை எம்மிடமே விட்டுவிடு
அதில் நீ சிரஞ்சீவியாய் வாழ்வாய்
வாழ்கிறாய்
உன் கலைகள் வாழும்
உன் எண்ணம் வாழும்
அமைதிகொள்
அருமை நண்பனே
இது முடிவல்ல
தொடக்கம்

'தமிழாள் கூத்தவை"
ஏ. ரகுநாதன்



www.padippakam.com

# கண்ணீர் மலரஞ்சலி

எங்கள் கலைத்தாயின் தவப் புதல்வன் அமரர் கிறகெறி தங்கராஜாவின் மறைவுச் செய்தி கேட்டு மனம் தாங்கொணாத் துயரம் கொள்கிறது. தாய் தேசத்தை விட்டு புலம் பெயர்ந்த பொழுது எம்மில் பலர் தங்கள் அடையாளங்களையும் விட்டு வந்தனர். ஆனால் எங்கள் தங்கராஜாவோ அதைத் தன்னோடு கூடவே கொணர்ந்து அதை எங்களோடு பகிர்ந்து தானும் நெகிழ்ந்து எங்களையும் வளர்த்தார். ஆனால் இன்று அந்த கலைக்கோயிலின் முதல்வன் தன் கோயிலின் நடையை சாத்திக் கொண்டதேனோ?

பற்பல சரித்திரங்கள் படைத்த அந்த சரித்திரத்தின் மனதிலும் சின்னதாய் ஓர் சின்னத்திரை ஆசை. அவ் ஆசையின் ஆவல்களில் ஒன்று தான் 'வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை". ஆந்த ஆவலின் நாயகன் நான் என்ற பொழுது எனக்குள்ளும் பல கனவுகள். ஏனோ கல்லறைப் படம் முடியுமுன்னே நீ கல்லறை சென்ற காரணம் தான் புரியவில்லை. காணும் இடங்களில் எல்லாம், 'எப்படி மகன் சுகமாக இருக்கிறாயா?" என்று கேட்கும் அந்தப் பரிவு இனி எங்கே? உன்னைப் பற்றி சொல்வதென்றால் இந்தப் பக்கம் போதாது. எனவே என் சக கலைஞர்களுக்கும் இடம் விட்டு எனக்கு உன் கண்ணீர் மலரஞ்சலியில் பக்கம் தந்த பண்பான அந்த கலைஞர்களின் கரம் பற்றி உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி முடிக்கிறேன்.

'உன் உடல் புதைக்கப்பட்டது உண்மை
உன் புகழ் மறுக்கப்பட முடியாதது அதுவும் உண்மை"

பனித்த கண்களுடன்
சீசர். செல்வா.



www.padippakam.com

# துயரச் செய்தியை ஏற்க மனம் மறுக்கிறது

திரு.கிறகெறி தங்கராஜாவின் மரணச்செய்தி நெஞ்சுக்குள் நெருப்பாக இறங்கியது. இந்தத் துயரச்செய்தியை ஏற்றுக்கொள்ள மனம் இன்னமும் மறுக்கிறது. அவர் ஒரு திறமையான கலைஞன் மட்டுமல்ல அற்புதமான ஒரு மனிதனும் கூட. தன்னைக் கலைக்கு அர்ப்பணித்துக்கொண்டவர் மாத்திரமல்ல சக கலைஞர்களை மதித்து கௌரவிக்கும் பண்பு கொண்டவர். புகலிட வாழ்வின் நெருக்கடியான இடர்பாடுகளுக்குமிடையில் தனது கலைமுயற்சிகளை தளர்வில்லாமல் முன்னெடுத்தவர். மேலும் மேலும் புதிய கலைச்சாதனைகளைப் புரிய வேண்டும் என்று தணியாத தாகம் கொண்டவர். கலையையே தனது சுவாசமாகக்கொண்ட இந்தக் கலைஞன் சிறியவர் பெரியவர் என்றில்லாமல் அனைத்துக்கலைஞர்களுடனும் தோழமைக் கரங்களைப் பிணைத்தவர். அவரோடு பழகிய நாட்கள் பசுமையானவை. மறக்க முடியாதவை. நெஞ்சோடும் நினைவோடும் கலந்து விட்ட இந்தக் காலத்தால் அழியாத கலைஞனை இழந்து தவிக்கும் அனைத்துத் தரப்பினரின் துன்பத்தில் நானும் பங்கு கொள்கிறேன்.

S.தேவன் -
நண்பர்கள்



www.padippakam.com

# என் ஏங்கும் விழிகள்!

சின்ன விழிமலரில் உறவு கண்டேன் - அவன்
சிரிப்பில் மயங்கிய நான் கனவு கண்டேன்
பொன்னிப் புதை மணலில் பிரிவு கண்டேன் - அவன்
போன இடந்தேடிப் புலம்புகின்றேன்.

அணைத்து மகிழுதற்கோர் அன்னையானேன் - அவனை
அடித்துத் திருத்துதற்கோர் தந்தையானேன்
நினைத்து வணங்குதற்கோர் தெய்வமானான் - அவன்
நின்ற இடந்தேடி நினைவிழந்தேன்.

மழலைச் சொல்லுதிர்த்து வாய்திறக்கும் - ஒரு
வார்த்தை வந்து நின்று மயங்கவைக்கும்
நிழலை இழந்ததொரு நெஞ்சமடா - அவன்
நிறுத்தி வழி நடந்த கலைக்கோயிலடா!

கட்டுப்படுவதற்கோர் காவல்வைத்(து)ததன்
கரையில் அவனிருந்து காத்து வந்தான்
சிட்டுப்பறந்தவுடன் திணறுதடா - நெஞ்சம்
தினமும் அவனை இங்கு தேடுதடா!

காலன் வருவதற்கோர் காலமிருந்தவன்
காட்சி முடிவதற்கோர் நேரமிருந்து
நாலும் முடிந்ததடா முடிவினிலே - அவன்
நட்பை மறப்பதற்கு முடியவில்லை.

கிறகெறியெனும் நடிப்பிசைக் காவலன் - எழில்
தோய்ந்து கிடந்ததொரு திருமுகத்தை
எப்படி மறந்திருப்பேன் வாழ்க்கையிலே - தினம்
ஏங்கும் விழிகளிடம் என்சொல்வேன்.

சங்கீத பூஷணம் M.A.குலசீலநாதன்



படிப்பகம்

www.padippakam.com

# கலைப்பொக்கிஷத்தை இழந்துவிட்டோம்

கலைச்சுடரே! கலைமுரசே! இசை அரசே!
கலைஞானியே! நடிப்பிசைக்காவலனே!
கண்ணீருக்கு எம்மைச் சொந்தமாக்கிவிட்டு
விண்ணோக்கி நீவீர் பயணித்த பயணம் தான் என்னவோ?
நேசித்த மனங்களில் எல்லாம் முகாரி இசைக்க
பாசம் நிறைந்த உறவே கலைவாசம் விட்டு
போனதுதான் என்னகோ? எம் சிந்தை யெல்லாம்
உந்தன் கலைவித்தைகள் பதிவாகி நிற்க
வித்தைகள் புரிந்தவனே எங்குதான் விரைந்தாய்?
ஊதாரிப் பிள்ளையாய் வேடம் ஏற்று
மேடையில் தோன்றி சிறந்த நடிகன்
விருதினைப் பெற்ற பெருமகனே! அன்றிலிருந்து
இன்றுவரை விரிந்த உன் படையல்களில்
வீரனாய், மாவீரனாய், தளபதியாய், காவலனாய்
கைப்பாசாய், பிலாத்துவாய் இன்னும் இன்னும்
அரிச்சந்திரனாய் நடித்தது மட்டுமல்ல
வாழ்ந்துதான் காட்டினாய் இப்பொழுதும்
எண்ணிப்பார்க்கின்றேன் இத்தனையும்
உன் ஒருத்தனால் மட்டுமே ஆகும் - இன்று
எம் கலைப்பொக்கிஷத்தை இழந்துவிட்டோம்
மாசற்றவனே உன் மலங்கப் புலன் ஐந்தும்
கலையை நேசித்தது இல்லை இல்லை சுவாசித்தது
கிடைத்த பட்டங்கள் யாவும் உனக்குத்தான்
பொருந்தும் என்பதில் ஐயம் இல்லை ஐயனே!
வாழும் போதே கலைஞர்களை வாழ்த்திட
வித்திட்டவனே விரிந்த மனம் தான் உனக்கு
வலிந்து சென்று வாழ்த்துவாய் பொன்னாடையும்
கூடவே பதக்கங்களும் அணிவித்து மகிழ்ந்திடுவாய்
உன்னிடம் விருது பெற்றவர்கள் ஏராளம்
பாராட்டும் பதக்கமும் பெற்றவர்களில்
நானும் ஒருவன் ஐயா இடிந்துவிட்டேன்
இடிவிழுந்த செய்தி கேட்டு
பாசத்திற்குரியவனே பார்போற்ற வாழ்ந்தவனே
கலைவள்ளலே கலைக்காவலனே
தமிழீழக் கலைவரலாற்றில்
முத்திரைபதித்து மக்கள் மனங்களுடன்

படிப்பகம்

www.padippakam.com

சங்கமித்த கலை அரசர் சொர்ணலிங்கம்
நடிகமணி வீ.வீ. வைரமுத்து பூந்தான் யோசெப்பு
எனப் பெரும் தகைகளோடு நடிப்பிசைக்
காவலர் கிறகெறி தங்கராஜாவும் இணைந்து
எம்மையெல்லாம் தம் நினைவுகளோடு வாழ
வழிசமைத்துச் சென்றுவிட்டார்
கலைவாழ்வினை வென்றவனே
சென்றுவா உன் நாமம்
தமிழ்க் கலைவானில்
என்றென்றும் சஞ்சரிக்கும்

மீளாத் துயரில்
அப்புக்குட்டி ரீ. ராஜகோபால்
சின்னக்குட்டி ரீ. தயாநிதி



# கலை பொக்கிஷம் ஒன்று மறைந்து விட்டது

பாரிசில் வாழ்ந்த முத்தான மூத்த பழங்களில் ஒன்று தவறி விட்டது. தனியாக்கப்பட்டு விட்டது. தனிமனிதனாய் பல சாதனைகள் புரிந்த சரித்திர நாயகன் அந்த அரிச்சந்திரன் மறைந்து விட்டான். காலத்தால் அழியாத காவியங்களை காத்து நின்ற கலைக் காவலன் மறைந்து விட்டான். நம்மை மறந்து விட்டான். கலைஞர்களில் என்றென்றும் வீறு கொண்டவனாய் கலையே வாழ்வாய் வாழ்க்கையையே கலைக்கு அர்ப்பணித்த அந்த கலைஞானி காணாமல் போனதெங்கே? பல கலைஞரைக் கண்டேன். கனவெல்லாம் கலையையே மதித்த கலைஞனை காணாத நாளில்லை, பேசாத நேரமில்லை. பாரிசில் பல புதுமுகங்களை அறிமுகப்படுத்தி, கலைக்கோயில் மூலம் வாழும்போது கலைஞர்களை கௌரவப்படுத்த வேண்டும் என்றெண்ணி பல பதக்கங்களை வழங்கியது மட்டுமன்றி விளையாட்டு வீரர்களையும் கௌரவப்படுத்த வேண்டும் என்றெண்ணி ஆண்டு தோறும் பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்திற்கு பதக்கங்கள் வழங்கிய கர்ணனே உனது இழப்பால் பாரிஸ் கலைஞர்கள் மட்டுமன்றி பாரிசில் வாழும் நம் கலைஞர்கள் அனைவருமே கதிகலங்கி நிற்கின்றோம். நடிகமணி மறைந்த போது நீர் நம்மோடு இருக்கின்றீர் என மகிழ்வுற்றோம். இன்றோ கலை உலகமே அதிர்ந்து நிற்கிறது. புதிய சரித்திரம் படைக்க முயன்று சரித்திர நாயகன் ஆகியது ஏன்? நீர் மறைந்தாலும் நடிப்பிசைக் காவலன் நம்மோடு வாழ்ந்து கொண்டு தான் இருப்பான்.

ஆர். ரி. எம். பிறதர்ஸ்
இன்ரநெஷனல்
இரா.குணபாலன்



www.padippakam.com

# மனங்களில் மரணிக்காதவன்

நாடகக்கலை மிகவும் தொன்மையானது. மகிழ்ச்சிப்படுத்தல், பரவசப்படுத்தல் என்ற நிலையில் நின்று, வாழ்வின் அக, புற முரண்களைப் பார்வை வடிவில் பன்முகமாய்க் கிளறிக்காட்டும் வடிவமாகி நிற்கிறது. இன்று நாடகக் கலை கல்வித்துறையில் அங்கீகாரம் பெற்று பல்கலைக் கழகம் வரை மேலோச்சி நிற்கிறது.

நாடகப் பயிற்சி முகாம்கள் - நாட்டுப்புறக் கலைகள் பற்றிய தேடல், ஏனைய மொழி நாடகக் கலைகள் மத்தியில் 'தமிழ் நாடகம்" என்று இனம் காட்டக்கூடிய ஒரு தமிழ் நாடகத்தை உருவாக்கும் முயற்சி. அதன் விளைவாக 'நவீன நாடகம்", 'தலித் நாடகம்" என்றெல்லாம் தமிழ் நாடகக் கலை புதிய பரிமானம் பெற்று பிரக்ஞை பூர்வமான கருத்துரு பெற்று வருகிறது.

புதிய நவீன நாடக வடிவங்களுக்கான தேடலில், தொன்மையும், மரபு சார்ந்த கலை வடிவமான கூத்துக்கலையும், நாட்டுப்புறக் கலைகளுமே 'தமிழ்நாடக" உருவாக்கத்திற்கு உந்து சக்தியாக அமையும் என்ற நிலையில், நாடகத்துறை சார்ந்த பல்கலைக்கழ ஆய்வாளர் நாடக ஆசிரியர்கள், நாடகவியலாளர்கள் என நாடகக்கலையில் கால் பதித்த அனைவருமே இன்று கூத்து வழிவந்த கலைஞர்களை வலை போட்டுத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இன்று எனது நண்பன் கிறகெறி தங்கராஜா பிரிவு, தமிழ் நாடக உலகுக்கு பெரும் இழப்பு என்றோ, ஒரு வெற்றிடம் என்றோ வெறும் வார்த்தைகளினால் சொல்லிவிடமுடியாது. உலக மொழிகளில் 'தமிழ் நாடகத்தை" நிலை நிறுத்த முயலும், முயலப்போகும் நாடகக்கலை வல்லுனர்கள், சமூகப் பிரக்ஞை கொண்ட நாடகத்துறை சார்ந்த இளைஞர்கள் மனங்களிலே எழப்போகும் மன அங்கலாய்ப்பும், ஏக்கமும், வேதனைகளும் தான் இவன்பிரிவின் துயரின் ஆழத்தை அளவிட முடியும்.

இன்று இவன் பிரிவால் இவனோடு ஆடிப்பாடி, நடித்து மகிழ்ந்த சக கலைஞர்கள் படும் வேதனையைக்கண்டு நான் வேதனைப்படுகிறேன்.

அவர்கள் வேதனை வேறு, என் வேதனையோ வேறு. நாற்பது வருடங்களுக்கு மேலாக அவன் ஆற்றிய கலைப்பணிக்காக இனி இவன் கலை வித்தகத்தை காண்போமா என்று அழுகிறார்கள். நானோ தமிழ் நாடக உலகம் அவன் பிறந்ததன் பயனை அடையும் நாள் நெருங்கிவிட்டது. கட்டிய கலைக்கோயிலின் சேவையையும் அதன் பயனையும் கலை உலகம் இனித்தான் அடையப் போகிறது. இனித்தான் எனது நண்பன் கிறகெறி தங்கராஜா தன் கலைப்பயணத்தைத் தொடங்கப் போகிறான் என்று

படிப்பகம்

www.padippakam.com

பெருமிதம் கொண்டிருந்த வேளையில் அவனின் இந்தப் பிரிவு வளர்ச்சியின் பாதையில் பதிவுகளைத் தொடங்கியிருக்கும் தமிழ்நாடக உலகுக்கே ஓர் பேரிடி - என்றே நான் துணிந்து செல்வேன். காரணம் ஒரு தொழிலையோ அல்லது ஏதோ ஒரு கலை வடிவத்தையோ கலாசாலை வரை சென்று கற்றுத் தேறுவதைவிட அதைப் பாரம்பரியமாக புரிந்து அதன் உணர்வுகளோடு கலந்து ஒன்றிணைந்து வெளிப்படும்போது அது தனித்துவமானதாகவே அமையும்.

கிறகெறியின் தந்தையார் டேவிட் சிறந்த கூத்திசைக்கலைஞர். 'உடைபடா முத்திரை". 'ஆட்டுவணிகன்" ஆகிய கூத்துக்களில் முத்திரை பதித்தவர். கிறகெறி தாலாட்டுக் கேட்டிருக்கமாட்டான். கூத்திசைதான் கேட்டிருப்பான். அவன் பிறந்து வளர்ந்த சூழல் அப்படி. அவன் உறவினர்கள் பலர் கூத்திசையில் தேர்ச்சியும் புகழ்ச்சியும் பெற்றவர்கள். அண்ணாவி அந்தோனிப்பிள்ளை, ஞானப்பிரகாசம், சின்னக்கிளி, நீர்வேலி அந்தோனிப்பிள்ளை, குழந்தை மரியதாஸ், பொன்னுக்குட்டி, திரேசம்மா இப்படி எண்ணற்ற கலைஞர்களைக் குறிப்பிடலாம்.

நடிப்பிசைத் துறையில் மட்டுமல்ல அரங்க அமைப்பு, ஒப்பனை, ஒலி-ஒளி போன்ற துறைகளில் அந்நாளில் சோடனை பிலிப்-றோஸ் ஆர்ட்ஸ் ஸ்ரூடியோ பப்பா என்று செல்லமாக அழைக்கப்பட்டு நாடறிய தெரியப்பட்டவர்கள் எல்லோரும் இவனின் உறவினர்களே.

இவ்வாறு பாரம்பரிய கலை உணர்வும் கலைஞானமும் கொண்ட குடும்பத்தில் கிறகெறி பிறந்ததினால் ஓர் கலைப்பித்தனாக - கலைஞானியாக கலை உலக கர்ணனாக அவன் வாழ்ந்ததில் வியப்பில்லை. இருப்பினும் கிறகெறியை ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் மிக முக்கியமாக இடம்பெறப்பட வேண்டிய சாதனையாளன் என்று எவரும் துணிந்து சொல்லலாம். தமிழில் மிகத் தொன்மையான கலை வடிவமான கூத்திசை இன்னும் பாதுகாக்கப்பட்டு தொடர்ந்து பாடப்பட்டு வருவது ஈழத்தில்தான். தமிழக நாடகவியலாளர்கள், ஆய்வாளர்கள் அரங்கப் பயிற்சி பெறும் பல்கலைக்கழக மாணவர்கள் நாடகத்துறையில் முனைவர் பட்டம் பெற முயல்வோர் கூட ஈழத்து நாட்டுக்கூத்திசையைக் கற்றுக்கொள்வதிலும் தெரிந்து கொள்வதிலுமன் மிக ஆர்வம் கொண்டுள்ளனர்.

80ல் இருந்து புதிய பரிமானங்களை உள்வாங்கத் தொடங்கிய தமிழ் அரங்கம், ஈழ விடுதலைப் போராட்டம் காரணமாக தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்த அண்ணாவி இளைய பத்மநாதனை தம் தேடலுக்குத் தீனி போடக்கூடியவராகக் கணித்துக்கொண்டது. 'பத்தண்ணா" என்றால் இன்று தமிழகத்தில் நாடகத்துறை சார்ந்த பல்கலைக் கழகங்களில் பதிவு பெற்ற பெயராகிவிட்டது. இவர்போன்று எமது மரபு சார்ந்த இசை நாடகத் துறையில்

தேர்ச்சிபெற்றோர் வாழ்ந்தார்கள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இருப்பினும் ஈழத்து நாடகத்துறையில் பதிவுபெற்றவர் பலராயினும் அவர்களுள் முன்னிலை பெறுபவர்களுள் மூவரைக் குறிப்பிடலாம். கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வீ.வீ. வைரமுத்து, நாட்டுக்கூத்துக் கலாநிதி புகுந்தார் ஜோசேப்பு ஆகிய மூவரே அவர்கள். கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்கள் பம்மல் சம்பந்த முதலியாரின் மாணவராவார். இவர் நாடக நடிப்பிலும், எழுத்திலும், நெறிப்படுத்துதலிலும் சிறந்து புகழ் பெற்றவர். நடிகமணி வீ.வீ. வைரமுத்து அவர்கள் சங்கரதாஸ் சுவாமிகளின் இசைநாடகங்களில் நடித்து இசை நடிப்பில் முத்திரை பதித்தவர். அடுத்து கலாநிதி புகுந்தார் ஜோசேப்பு அவர்கள் நாட்டுக்கூத்தில் தனக்கென்று ஓர் தனியிடத்தை நிலைநிறுத்தியவர். ஆயினும் இவர்களெல்லாம் நடிப்பு, இசை, கூத்து என்று ஒவ்வொரு தனித்துறையிலும்தான் தம்மை சிறப்பாக வெளிப்படுத்தியவர்கள். ஆனால் கிறகெறி தங்கராஜா இம்மூன்று துறைகளையுமே ஒருமித்து வெளிப்படுத்தக்கூடியவனாக அதுவும் எந்தத் துறையிலும் இவன் வெளிப்பாட்டில் யாரும் குறை கூறாவண்ணம் மிகச் சிறப்பாகவே செய்து காட்டியவன். நாடகம், இசைநாடகம், கூத்திசை, இன்றைய கால மெல்லிசை இவை அனைத்திலும் இவன் தன் பதிவை ஏற்படுத்தியவன். இப்படி அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்குபவர்களை எண்ணி எடுப்பதே கடினம் என்பது நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையாகும்.

மிக இளையவனாக கிறகெறி தன் கலைப்பயணத்தைத் தொடங்கிய காலப்பொழுதில் திரைப்படப் பாடல்களில் மோகம் கொண்டவனாய் மெல்லிசைப் பாடல்களைப் பாடுவதிலேயே தன்னை இனம் காட்டிக் கொண்டவன். எங்கெல்லாம் ஒலிபெருக்கி ஒலிக்குமோ அங்கெல்லாம் அந்த இளைஞன் கிறகெறியின் பாடல்களைக் கேட்கலாம். ரீ.எம்.எஸ். அவர்களின் பாடல்களை அவன் மிகவும் லயித்துப் பாடுவதைக் கேட்கும் ரசிகர்களில் நானும் ஒருவனாய் இருந்திருக்கிறேன். பின்னர் அவன் நடிப்பில் ஆர்வம் கொண்டவனாய் நாடகத் துறையில் தன்னை வெளிப்படுத்த முயன்றபோது, அவன் கைகளைப் பிடித்து ஆனா ஆவன்னா எழுத வைத்தவர் கிறகெறியின் அயல் வீட்டுக்காரனான ஐயா ஜோசப் என்பவரே. 'மானம் காத்த மறவன்", 'ஆனந்தக் கண்ணீர்" ஆகிய சமூக நாடகங்களே இவனின் ஆரம்ப நாடகங்களாகும். அதனைத் தொடர்ந்து எனது நாடகங்கள் உட்பட இவன் நடித்த மேடை நாடகங்கள் எண்ணிக்கை என்னால் குறிப்பிட முடியாவிட்டாலும் ஈழத்தில் நடந்த பல நாடகப் போட்டிகளில் பரிசுகளைப் பெற்றுக் குவித்ததன்மூலம் தன்னை ஓர் சிறந்த நாடக நடிகனாக மக்கள் மத்தியிலும், நடிகர்கள் மத்தியிலும் தன்னை ஓர் சிறந்த நடிகனாகப் பிரகடனப்படுத்தினான். வானொலி நாடகங்களையும் கிறகெறி விட்டுவைக்கவில்லை.

www.padippakam.com


பின்னர் நடிகமணி வீ.வீ. வைரமுத்து சங்கரதாஸ் சுவாமிகளின் இசை நாடகங்களை பாடி நடித்த நடிப்பில் ஈடுபாடு கொண்ட கிறகெறி அவரையே தன் குருவாகக் கொண்டு இசைநாடகத் துறையில் நுழைந்தபோது அவரிடமில்லாத ஒரு சிறப்பையும் அவனிடம் காணமுடிந்தது. நாடகத் தன்மையிலான வசன உச்சரிப்பும், முகபாவமும், சொற்பிரயோகமும்தான் அவை. இதனை திரு. வைரமுத்து அவர்களே பெருமையாக லண்டன் கந்தையா சானா அவர்களிடம் பெருமையாக எடுத்துக் கூறியதை நான் நேரில் கண்டவன். 80ல் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் 'மயான காண்டத்தை" அவன் மேடையேற்றியபோது அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கண்ணீர் சிந்தி அழுததையும், பாராட்டிப் புகழ்ந்ததையும் நான் நேரில் கண்ட சாட்சியாகும். நாட்டுக்கூத்தில் அவன் காலடி எடுத்துவைத்த நாடகம் 'பாலசூரன்" என்னும் நாட்டுக்கூத்தாகும். இது அவன் உறவினர்கள் அடிக்கடி மேடையேற்றும் கூத்தாகவிருந்தது. இதில் முதன்முதல் அவன் அரசனாக நடித்தபோது அவன் எடுத்தவைத்த காலடியும், இசைக்கேற்ற அங்க அசைவும், நடிப்பும், உச்ச ஸ்தானத்தில் பாடக்கூடிய குரல்வளமும் பார்த்தோரைப் பரவசப்படுத்தியதுபோல் - அதைப் பார்த்துக் கொண்டிருந்த புகுந்தார் ஜோசேப்பையும் பிரமிக்க வைத்ததென்றே சொல்லவேண்டும். அதனால்தான் பின்னர் புகுந்தார் ஜோசேப் தயாரித்து மேடையேற்றிய கூத்துக்களிலெல்லாம் கிறகெறி இடம்பெற்றான். களில், நெடில் பாடியதும் போர்த்தெரு பாடுவதே எல்லோர்க்கும் வந்த கலையாய் இருந்தபோது புகுந்தார் ஒருவரே சந்ததம் வீறாகப் பாடும் வித்தையைப் புரிந்தவர். அதே வித்தையை கிறகெறியும் தன் பாடல்களில் மிக இயல்பாகப் புரிந்தான். புகுந்தாரிடம் இல்லாத மேடை நடிப்புக்களை கிறகெறிக்குக் கைகொடுத்ததால் கூத்து நடிப்பிலும் புதுமையைப் புரிந்தவனாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டான். இவற்றையெல்லாம் உற்று நோக்குகையில் நாடகக் கலையில் பல்வேறு பரிமானங்களையும் தனி ஒருவனால் செய்து காட்ட முடிந்ததில் நாடக, இசைநாடக வரலாற்றில் கிறகெறி முதன்மை பெறக்கூடிய ஓர் சாதனையாளன் என்றால் மிகையாகாது. புலம்பெயர்ந்த பின்னும் அவன் தொடர்ந்த கலைப்பாதையின் சிறப்பினை இந்த அஞ்சலி மலரில் பலரும் சொல்லியிருப்பதினால் அதை இங்கே நான் குறிப்பிட வேண்டிய அவசியமில்லை என்றே எண்ணுகிறேன். இருப்பினும் இங்கே அவன் ஆற்றிய கலைப்பணிகளில் சில விமர்சனத்திற்குட்படுத்தப்படவேண்டிதொன்றேயா யினும் இவன் சிறந்த நடிப்பிற்கும் நாடகங்களை மேடையேற்றுவதில் காட்டிய அக்கறைக்கும் ஆர்வத்திற்கும் நாம் என்றும் மறுக்க முடியாத சாட்சிகளே.

முன்னர் நான் குறிப்பிட்டது போல இன்றைய நிலையில் 'தமிழ் நாடகம்" தனக்கென ஓர் நெறியை உருவாக்க முயலும்போது இப்படி ஓர் சாதனையாளனின் இழப்பின் துயரம் வார்த்தைகளுக்கப்பாற்பட்டதே. இவனின் கலைவாழ்வும் இவன் நடித்த பல்வேறு தரப்பட்ட நாடகங்களினூடாக இவன் காட்டிய வெளிப்பாடும் நாடகக் கலைபற்றி அறிய முயல்வோரின் ஆய்வு

www.padippakam.com

செய்வோரின் கவனத்திற்குட்படுத்தப்பட வேண்டியதொன்றே. தமிழினம் நாளை தனக்கென்று ஓர் அரசை நிறுவும்போது இவன் நிச்சயம் பதிவு செய்யப்படவேண்டியவன் என்பதை இங்கே நான் கூறிக்கொள்வதில் பெருமை கொள்கிறேன். இதற்குத் தேவையான இன்னும் பல நிகழ்வுகளையும், கலை வித்தகங்களையும் இவன் கலைப்பாதையிலிருந்து என்னால் எடுத்துக்காட்ட முடியும். இந்த அஞ்சலி மலரில் திரு. இளங்கோ அவர்களும் கிறகெறியைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. எனவே எங்கள் கலைஞன், எனது நண்பன் கிறகெறி தங்கராஜா தமிழீழ நாடக வரலாற்றில் மட்டுமல்ல, அனைத்துத் தமிழ் மனங்களிலும் மரணிக்காது வாழ்வான்.

எம். அரியநாயகம்



படிப்பகம்

www.padippakam.com

# புலம்பெயர்ந்து வாழ்ந்து அமரரான தமிழீழக் கலைஞர் கிறகெறி தங்கராஜா

புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த தமிழீழக் கலைஞர் கிறகெறி தங்கராஜா அவர்கள் அமரராகிவிட்டார். நம்பமுடியவில்லை. அவர் என்றும் இளமையுடன் கலைத்துவ கனத்துடன் நடமாடியவர். 60ம் ஆண்டுகளில் பிற்பகுதி யாழ்ப்பாணக் குடாநாடு ஒரெழுச்சிக்கான ஆயத்தங்களால் நிறைந்திருந்தது. சின்னமாமி புகழ் பாடகர்களும், அரியாலைக் கலைஞர்களும், திருமறைக்கலா மன்றத்தினரும் ஒவ்வோர் ஊர்மனைகளுக்குமான சனசமூக நிலையங்களும், பௌர்ணமி கலைவிழாக்களும் கலை ஆளுமைகளை வெளிக்கொணர்வதில் முன்னணி வகித்தன. அந்தச் சூழலிலேயே திரு. கிறகெறி தங்கராஜா அவர்கள் தன் கலை ஆளுமையை வெளிப்படுத்தினார். நான் பொடியனாக அவரது கலை ஆளுமையை வாய்பிளந்து பார்த்தவன். ஏறத்தாழ கால் நூற்றாண்டின் பின் பாரிஸ் நகரத்திலும் அவரது கலை ஆளுமையை அதே இளமையுடனும் கலைத்துவத்துடனும் காண நேர்ந்தபோது வாய்பிளக்கும் ஆச்சரியம்தான் தோன்றியது. கடந்த ஆண்டில் நடைபெற்ற இசைமுரசு என்னும் பாடல் போட்டி நிகழ்ச்சியில் அவரைப் பார்த்தேன். கலைத்துவ மிடுக்குடன் பாடினார் பரிசை வென்றார். இசையும் - பாடலும், கூத்தும் - நடிப்பும் அவரது இரத்தத்தில் கலந்து இருந்தது என்பதை பல்வேறு தடவைகளில் அவர் நிரூபித்தார்.

சமூகத்தின் கூட்டுநினைவுகளை அவற்றின் தொடர்ச்சிகளை கலைஞர்களே பேணுகின்றனர். நம் இலக்கியங்களில் அவர்கள் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என குறிப்பிடப்படுகின்றனர். கூத்தாடிகள் கேளிக்கையையும் மகிழ்ச்சியையும் மட்டும் ஊட்டுபவர்கள் என்னும் கருத்து பாமரத்தனமானது. அவைக்காற்றும் கலைகளில் மகிழ்வும் கேளிக்கையும் ஓரம்சம் மட்டுமே.

புலம்பெயர்ந்த தேசத்தில் தாயகத்தின் கலையை பேணி வளர்த்ததில் கலைஞர் கிறகெறி அவர்கள் முதன்மைப் பங்காற்றி வந்தார் என்பது வெறும் புகழ்ச்சிக்குரியதல்ல. அவர் தனது கலை ஆளுமையை அடுத்த தலைமுறையினரிடத்தில் தொற்ற வைத்திருப்பார் என்றே கருதுகின்றேன். இனி வரும் காலங்களில் அது வெளிப்படக்கூடும். அப்போதெல்லாம் அவரை நாம் நினைத்திருப்போம்.

கலை இலக்கிய ஆர்வலன்
கி.பி. அரவிந்தன்
*31.01.2000*

படிப்பகம்

www.padippakam.com

# பிரகாசமான பிரகாசம்

சூரியனைவிட பிரகாசமானதும், மேகங்களைவிட மென்மையானதும், ஆகாயத்தைவிட லேசானதுமான கலைப்படைப்புக்கள் எங்கெங்கு கருத்து வெளிக்கொணரப் படுகின்றனவோ அதனுடன் தொடர்புளைக்கொண்ட அனைவரும் என்றென்றும் பேசப்படுவார்கள்.

அண்ணன் கிறகெறி அவர்களின் கலை வெளிப்பாடுகளும் 'வரையறையோடு வரையப்பட்ட கோலங்களாக" அமைந்திருந்ததினால் என்றும் அனைவரிடமும் வலம் வந்துகொண்டே இருக்கும்.

கிறகெறிக்காக தீட்டப்படுகின்ற இந்த வரிகளிலே நான் பார்த்த அந்த கலைஞனைப்பற்றிய நினைவலைகள் மீட்கப்படாவிட்டால் என்னிடம் இருந்து வெளிப்படும் அவனின் நினைவு நிறைவு பெற்றதாகாது.

1980 களில் ஆரம்பத்திலேயே கிறகெறி தங்கராஜாவின் கலைத்திறனை இனங்கண்டு அந்தக் கலைஞனை துணிவுடன் நிலை நிறுத்தியவர் அண்ணன் அரியநாயகம் என்பது நானறிந்த ஒரு தெரிமை ஆகும்.

அந்த நாட்களிலே கோப்பாயிலே நாம் நடாத்திய பல கலை விழாக்களிலே கிறகெறி தங்கராஜாவை அரிச்சந்திரனாக, பிலாத்தாக நடிக்க வைத்து பெருந்திரளான மக்களுக்கு தரமான கலையாழம் கொண்ட படைப்புக்களை வெளிக்கொணர்ந்த ஆத்ம மகிழ்வை பெற்றவர்களில் எம். அரியநாயகத்துடன் நானும் இணைந்தவன், இருந்தவன்.

தாயகத்திலே நான் பார்த்த ஒரு தரமான நடிகனை புலம்பெயர்ந்த பின்னர் இங்கு ஒரு நாட்டுக்கூத்து கலைஞனாக, ஒரு சிறந்த பாடகனாக, ஒரு தயாரிப்பாளனாக, ஒரு அறிவிப்பாளனாக இவை யாவற்றிற்கும் மேலாக கலைஞர்களுக்கே உரிய கர்வம் எதுவும் அற்றவனாக, திறமை உள்ளவர்கள் அனைவருக்கும் அவர்களது திற வெளிப்பாட்டிற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணச் செயற்பாட்டை கொண்டவனாக நான் பார்த்தபோது இந்த கலைஞனோடு நான் ஆரம்ப கலைகளிலேயே செயல்பட்டவன், பழகியவன் என்று பெருமிதம் அடைந்தது, அடைவது நினைவு படுத்தப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

இந்த பெருமித நினைவுகளோடு அந்த பெருமிதத்தைத் தந்த கலைஞனை நினைவு கூறுகின்றேன்.

நல்ல கோலங்களாக
மலரும் கோலங்களை
வரையப்பட்ட கோலங்கள்
மனக்கோலங்களாக என்றென்றும்
வலம் வரும் மணம் பரப்பும்.

கோவை நந்தன்
ஒலிபரப்பாளர் - ரீ.ஆர்.ரீ. - பிரான்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

# மாகலைஞன் கிறகெறி

நம் தமிழ் ஈழமண்ணில் மாபெரும் கலைஞன் கிறகெறி என்று கூறினால் அது மிகைப்பட்ட கூற்றல்ல என்பதை யாரும் ஏற்றுக்கொள்வர். கலைஞர்களில் பல்வேறு தனித்தனி வகையான திறமை கொண்டவர்கள் உண்டு. ஆனால் இயல் இசை நாடகம் எனும் முக்கலையும் தன் ஒப்புயர்வற்ற திறமையினால் மக்களுக்கு வாரி வழங்கியவர் கிறகெறி.

என் இளம் பராயம் தொட்டு என்னுடன் நட்பு பாசம் என்னும் ஓர் அன்புக்கயிற்றால் தன்னைப் பின்னிக்கொண்டு தன் இறுதிக் காலம்வரை அதே பிணைப்புடன் வாழ்ந்த ஒரு அருமை நண்பனை இழந்துவிட்ட கொடுமை என் மனதில் பெரும் காயத்தை ஏற்படுத்திவிட்டது. பாடசாலையில் பயின்ற நாட்கள் தொடக்கம் என்னுடன் ஒன்றாக அமர்ந்து பாடல்கள் பாடி நாடகங்கள் கூத்துக்கள் இவற்றில் பாகமேற்று நடித்து, என் தந்தையார் அண்ணாவியார் புகுந்தான் யோசேப்பு இவர்களின் பெருமதிப்புக்கும் புகழ்ச்சிக்கும் பாத்திரமானவர், கிறகெறி புலம்பெயர்ந்து வந்த காலத்தில் இருந்து என்னை இந்த அந்நிய மண்ணில் காண்கின்றபோதெல்லாம் கட்டித்தழுவி நலம் விசாரித்து வந்தது மட்டுமல்லாது தன்னுடன் சேர்ந்து இந்த அந்நிய நாட்டிலும் கலை வளர்க்கும் பணியில் ஈடுபட வேண்டும் என நிர்ப்பந்திப்பது வழக்கமாக இருந்தது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நான் பணியாற்றிய காலத்தில் இவரது நாட்டுக்கூத்துப் பாடல்கள் பலவற்றை ஒலிப்பதிவு செய்து ஒலிபரப்பி இருக்கின்றேன். அவை இப்போதும் அங்கே பாடல் களஞ்சியத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. வளரும் கலைஞர்களை இவர் ஊக்குவித்த பாங்கு பாராட்டப் படக்கூடியது. குழந்தை மனமும் கபடமில்லாத எண்ணமும் கொண்ட இந்த ஒப்பற்ற கலைஞன் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து செய்வதே நாம் இவருக்கு செய்யக்கூடிய மிகப்பெரும் அஞ்சலியாகும்.

டேவிட் ராஜேந்திரன்
முன்னாள் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

www.padippakam.com

# உறுதி

தமிழீழ நாடக வரலாற்றிலும்
புலம்பெயர்ந்தோர் நாடக வளர்ச்சியிலும்
தவிர்க்க முடியாத ஒருவர்
அமரர் கிறகெறி தங்கராஜா!
தமிழ் மரபு சார்ந்த நாடகங்களான
நாட்டுக்கூத்து, இசைநாடக
வடிவங்களுக்கும்
சமூகப் பயன்பாடு சார்ந்த
நாடகங்களுக்கும்
தன் சிறந்த நடிப்பால்
புதிய உத்வேகத்தைத்
தந்தவர் இவர்
எதிர்பார்ப்புகளே
வாழ்க்கையாகக்கொள்ளும்
இன்றைய நிலையில்
எதிர்பார்ப்பின்றி நாடகப்பணியாற்றி
சகலரையும் ஊக்குவித்து
கௌரவித்து - மனித நேயத்துடன்
மகத்தான நாடக நடிப்புக்கலையை
தன் வாழ்வாகக்கொண்ட
இந்த மனிதரின் இழப்பு
தமிழ் மரபு சார்ந்த நடிப்பிசைக்கு பேரிழப்பே!
புலம்பெயர்ந்து வாழும்
நாடகப்பிரியர்கள் மத்தியில் மட்டுமன்றி
இவரை அறிந்த அனைத்துத்
தமிழ் நெஞ்சங்களிலும்
இவர் மறைவு மறக்க முடியாத துயரத்தை
ஏற்படுத்தியுள்ளது என்றால்
அது மிகையாகாது
உடல் பிரிந்தாலும் இவர் தன் வாழ் நாளெல்லாம்
சுவாசித்த கலை மூச்சு எம் கலைஞர்களோடே
சேர்ந்து வாழும் - இது உறுதி.

அ.இயல்வாணன்
(ஆசிரியர் - சுட்டுவிரல்)

DR.க.தேவமனோகரன்
முத்து ஜெயசிங்கம்
பிரான்சு தமிழர் கலைகலாச்சார மன்றம்
(GIFT)

படிப்பகம்

www.padippakam.com

# மரணத்தை வென்ற இலட்சிய மனிதன்

மரணம் என்பது மனிதனுடைய ஆசைகள், அபிலாஷைகள், கற்பனைகள், இலட்சியங்கள் அனைத்தையுமே ஒரே நொடியில் அழித்துவிடுகின்றது.

மரணத்தை வென்று இறப்பே இல்லாதவனாக ஒரு மனிதனால் வாழமுடியுமா? என்ற கேள்வி மனித குலம் தோன்றிய காலம் தொட்டே இருந்து வருகின்றது.

மரணத்தை மனிதனால் தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும், வெல்ல முடியும். அதாவது தனக்காக வாழாது பிறருக்காக வாழ்பவர்கள், சமூகத்தின், இனத்தின், மனித குலத்தின் மேம்பாட்டிற்காக தங்களை அர்ப்பணித்துக்கொள்பவர்கள், அதற்காகத் தங்கள் வாழ்வைத் தியாகம் செய்பவர்கள் மரணத்தை வெற்றி கொள்கிறார்கள். மரணம் என்ற சொல் மூலம் அவர்களது உடல் அழிந்து போகலாம். ஆனால், மக்கள் மனங்களில் - வரலாற்றில் அவர்கள் பதித்த தடங்களும் - அவர்களுக்குள்ள இடமும் என்றும் அழிவதில்லை.

அந்த வகையில் போட்டிகள், பூசல்கள், அழுக்காறுகள் நிறைந்த நம்முடைய சமூகத்தில் தம்முடைய கலைப் பணி மூலம் சமூக மேம்பாட்டிற்காக உழைத்த அமரர் கிறகெறி தங்கராஜா அவர்களும் மரணத்தை வென்று நம்முள் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை

கலைஞர்களை இனம் பிரித்து, தரம்பிரித்து, ஆர்வம் காட்டியும், தூக்கிலிட்டும் சித்து விளையாட்டுக்கள் அரங்கேற்றப்படும் புலம்பெயர் தமிழ்ச் சூழலில் - தன்னுடைய சொந்தப்பணத்தில் எந்தப் பிரதி உபகாரமும் எதிர்பார்க்காமல் விழாக்கள் நடத்தி சக கலைஞர்களைப் பாராட்டிய கிறகெறி தங்கராஜா அவர்கள் மரணத்தை வென்ற இலட்சிய மனிதராக நம்முடன் - நம்முள்ளே வாழ்கிறார். என்றும் வாழ்வார்.

சிவா - சின்னப்பொடி
(பத்திரிகையாளரும் அரசியல் விமர்சகரும்)



படிப்பகம்

www.padippakam.com

# தமிழீழ மண்ணில் தலைசிறந்த தமிழ் கலைமகனே என் ஆருயிர் நண்பா!

தங்கத்தை பெயரில் மட்டும் பதித்த தங்கராசாவே, அத்தங்கத்தால் பதக்கமிட்டு தமிழ் கலைஞர்களை எல்லாம் கௌரவித்து தமிழ் கலைத்தாய்க்கே விருந்து வைத்தாய். நடிப்பிசை காவலனே என் கடன் தமிழ் கலைப்பணி செய்து கிடப்பதே என வாழும்போது வாழ்த்த வேண்டும் என்று வளரும் கலைஞர்களையும் நம்மை வளர்த்த கலைஞர்களையும் கௌரவித்தாய் நண்பா. உன் இறுதி மூச்சு அணையும் நேரம் தனின் அன்று அரியநாயகத்தின் நூல்வெளியீட்டில் அவர் மேல் உன் கடைசித் தங்கப்பதக்கத்தை அணிவத்து உன் கலைத் தாகத்தை சரித்திரமாக்கினாய். அக்காட்சி நிற்குதடா என் கண்முன்னால்.

இதுமட்டுமா உன் உயிர் போவதற்கு முதல் நாள் இருவு நாம் இருவரும் ரெலிபோனில் உரையாடும் போது நீ சொன்னாய், மச்சான் தமிழர் கல்வி நிலையத்திற்கு இப்போது தானடா 2 பவுண் தங்கம் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன் என்று.

நண்பனே தமிழ் கலைக்கு மட்டுமா தங்கத்தை கொடுத்தாய் தமிழ்க் கல்விக்கும் அல்லவா உன் கடைசி தங்கத்தைக் கொடுத்தாய்.

நண்பா எம் இருவரின் நட்பையும் நட்போடு விட்டு விடாமல், நடியடா நீயும் என்று என்னையும் நடிகனாக்கி அரங்கத்திலே ஏற்றிவிட்டு அந்தப் பாத்திரத்தின் பெயரையே மக்கள் உச்சரிக்கும் புகழ்தனைத் தந்துவிட்டு சென்று விட்டாயே!

உன்னோடு சேர்ந்து ஐரோப்பிய மண்ணில் கலை உலகை கண்ட நான், நீ விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதே உனது நட்புக்காக நான் உனக்கு செய்யும் காணிக்கை.

அருணகிரி



படிப்பகம்

www.padippakam.com

# கலைச் சிகரம்

2000 ஆண்டின் அதாவது, 21 ஆம் நூற்றாண்டுக்குள் காலடி எடுத்து வைத்து ஒரு வாரம் கழித்து விடை பெற்றுப் போக இன்னமும் சரியாக ஓர் நாள் தான் பாக்கி இருக்கும் சமயம் பார்த்து ஜனவரி மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நேரம் சுமார் 11 மணி அளவில், அதிர்ச்சி தரும் செய்தியைக் கேள்விப்பட்டு நாடி நரம்புகள் அனைத்தும் ஓர் நொடிப் பொழுது ஸ்தம்பித்துப் போனது.

பலவித திறமைகள் ஒருங்கே குவிந்த அருமையான கலைப் பெட்டகத்தை அல்லவா காவு கொடுத்து விட்டோம் நாம். இந்த உலகத்தில் பிறந்த அனைவருமே இறப்பது இயற்கையின் நியதி என்றாலும் கூட தவமிருந்தாலும் கிடைக்க முடியாத ஒருசில ஆற்றல் அனைத்தும் அத்துப்படியாக கரைத்துக் குடித்த, இது போன்ற இழப்புகள் நிரப்ப முடியாத வெற்றிடங்கள் தான் என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது.

அவருடன் சேர்ந்து மணிக்கணக்கில் பேசியவற்றையெல்லாம் சற்றுத் திரும்பிப் பார்க்கிறேன்....... அப்பப்பா... எதை எழுதுவது? எதைத் தவிர்ப்பது என ஒன்றும் புரியாது தவிக்கிறேன். இப்போது கூட அவரது கலைப் பைத்தியத்தை அதிரடியான வித்தியாசத்துடன் வெளிக் காண்பிக்கத் துடிக்கும் ஆவேசமான ஆர்வத்தின் குரல் தான் ஓங்கி ஒலித்த வண்ணம் வியாபித்துள்ளது நான்கு திக்கும் நமக்குள்ளே. அவருடைய அபிலாஷைகள் ஒன்றா... இரண்டா வெகு சுலபமாக எடுத்துச் சொல்ல? காரணம், வாழ்க்கையில் ஓர் அம்சமாக கலையை ரசிக்கும் கும்பலுக்குள்ளே கலைச் சேவையை வாழ்க்கையின் இலட்சிய பணியாக்கி சதா சர்வ காலமும் அது பற்றிய தனது வருங்கால திட்டங்களை நம்மோடு பகிர்ந்து காண்பித்த ஒப்பற்ற பிறவிக் கலைஞர் அமரர் கிறகெறி அண்ணன். கலைக்கான தனது வாழ்க்கையின் தொண்ணூற்றொம்பது வீதத்தை அர்ப்பணித்து தனது எண்ணத்துக்கு ஊட்டச்சத்தாக தன்னையே ஆதாரமாக்கிக் கொண்ட பித்துக்குளி அவர் என்றால் அது ஒன்றும் சாதாரண அலங்கார பிதற்றல் அல்லவே!

அவர் வாழ்ந்த கால கட்டத்தில் அவரை சரியான முறையில் பயன்படுத்தினோமா என மனிதாப ரீதியாக ஆராய்ந்தோமானால் அவருடைய வேட்கைக்கு ஆரோக்கியமான தீனி போடத் தவறியவர்கள் நாம் என்பதை பகிரங்கமாக ஒத்துக் கொள்வதில் எவருக்கும் ஆக்ரோஷம் எழ நியாயம் கிடையாது என்பதே அப்பட்டமான வெளிப்பாடாகும்.

விமர்சனம் என்பது கிரேக்க தத்துவஞானி அரிஸ்டோட்டில் ஆரம்பித்து வைத்த வைபவம். விமர்சனம் தான் ஒரு மனிதனுடைய தவறுகளை பழுது பார்த்து திருத்த உதவும் ஓர் அருமையான ஊடகம். விமர்சனத்திற்கு

படிப்பகம்

www.padippakam.com

உட்படாத எந்த ஒரு மனிதனாகட்டும் சரி இல்லாவிடில் ஓர் பொருளாகட்டும் சரி முழுமை அடைந்ததாக இதுவரைக்கும் சரித்திரம் கிடையாது.

'வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி மக்களின் மனதில் நிறைந்தவர் யார்?" என்கிற கவிஞர் கண்ணதாசனுடைய பாடல் தான் இந்த சமயத்தில் ஞாபகத்துக்கு வருகிறது. இது கிறகெறி அண்ணனுக்கு கச்சிதமாக பொருந்தும் அல்லவா? இதுக்கும் ஓர் காரணம் கைவசம் இருக்கிறது. அதாவது, இதே பாடலைத் தனது நாடகம் ஒன்றுக்கு பயன் படுத்துவதற்காக காட்சியின் நிலவரத்தை எடுத்து சொல்லித் தந்து வரிகளை மாத்திரம் தகுந்தபடி நம்மைக் கொண்டு மாற்றி எழுதி வாங்கி அதனை தானே பாடி ஒலிப்பதிவு செய்து பிற்பாடு நாடகத்திலும் அதனைப் பயன்படுத்திக் கொண்டது அவருடைய சாதுர்யம். தனது எண்ணங்களின் மீது கிறகெறி அண்ணன் கொண்ட அசைக்க முடியாத தன்னம்பிக்கையின் நிமித்தம் தன்னைச் சுற்றி உள்ளவர்களையும் தனக்கு சாதகமாக இயங்க வைப்பதில் சமத்தர் என்பதற்கு சின்ன உதாரணம் தான் இது.

அவர் எத்தனை வயதில் அரிதாரம் பூசினார் என்பதை அவருடைய சமகாலத்து நண்பர்களைத் தவிர நாமறியோம் பராபரமே. ஆனாலும், 'இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்" என்ற கவிஞர் வாலியின் பாடல் வரிகளுக்கு பொருந்தும் வண்ணம் வாழ்ந்து காட்டி எமை எல்லாம் ஏங்க செய்துவிட்டார் கிறகெறி அண்ணன் அவர்கள். இருந்தாலும் அவரது இலட்சிய வேட்கைக்கு புத்துயிர் ஊட்டி அந்த எண்ணங்களுக்கு நல்ல வடிவம் கொடுத்து அதை அவர் பெயரால் கூடியவரை அரங்கேற்றுவது தான் நமது கலைஞர் குழுக்களுடைய அயராத உழைப்பாகவேண்டும் என நாம் எல்லோரும் ஒரு மனதாக உறுதிமொழி கொள்ள வேண்டும், பரிசுத்தமான மனதுடன் என்பதே நம்முடைய அன்பான கோரிக்கை ஆகும்.

அண்ணரோடு கிட்டத்தட்ட 1984 ஆம் ஆண்டளவில் ஏற்பட்ட நட்பு காலப்போக்கில் வலுத்து உரிமையாக நமது கூட்டாளி ஒருவர் மீது ஒருவர் நேசத்துடன் கை போட்டு பேசும் அளவிற்கு அந்நியோன்யமாகியது இறுதிக் காலம் வரைக்கும். உண்மையை புட்டு புட்டு சொல்லப் போனால் எனது வாழ்க்கையில் எனது தந்தையாருக்கு பிற்பாடு அதிக திட்டு வாங்கியது கிறகெறி அண்ணர் அவர்களிடம் தான். கை நீட்டி அறை வாங்காதது ஒன்று தான் பாக்கி என வெளிப்படையாகக் கூறுவதில் எனக்கு எதுவித கூச்சமோ அல்லது வெட்கமோ கிடையாது. ஏனென்றால், நாம் செய்யும் தப்புத் தண்டாக்களை அவ்வப்போது சுட்டிக்காட்டி ஒரு தந்தைக்கு தந்தையாய், ஒரு சகோதரனுக்கு சகோதரனாக கரிசனையுடன் உடனடியான நிவாரணமாக நம்மை பழுது பார்த்த உத்தமர். தவிர, நமக்கும் கிறகெறி அண்ணனுக்கும் அதிக தூரத்திற்கு வயது வித்தியாசம் இல்லாததும் வேண்டுமானால் ஒரு காரணியாக இருந்திருக்குமோ யார் கண்டார்?

படிப்பகம்

www.padippakam.com

கிறகெறி அண்ணன் அவர்கள் கடைசியாக நடத்திய படப்பூஜையின் போது, தனது உடல் நலத்தையும் பெரிது படுத்தாது நான் ஒரு நோயாளி என அவர் என் மீது காண்பித்த அக்கறையை இப்போது கூட ஒரு கணம் எண்ணிப் பார்க்கும் போதெல்லாம் மெய்சிலிர்க்கிறது. இந்த கவனத்தை தன்மீது ஏன் செலுத்த மறந்தார்?

சாணியை மிதிக்க அருவருப்புப்பட்டு மலத்தின் மீது காலை வைக்கும் குணசீலர்கள் மத்தியில் கலைக்காகவே கடவுளின் பரிசாக நமது மக்கள் நடுவே உலாவி தனது நாட்டுக் கூத்தாலும் பலவிதமான நடிப்பாற்றலாலும் பாடும் குரல் வளத்தாலும் தனி முத்திரை பதித்து விடை பெற்று விட்டார். இல்லை... இல்லை... நம்மை எல்லாம் விழிப்படைந்து, உஷார் அடையப் பண்ணியுள்ளார் அமரர் கிறகெறி தங்கராசா அண்ணன் அவர்கள்.

எனது துணைவியாரின் குரலைத் தொலைபேசி மூலம் கேட்டு விட்டு பாடலுக்கு ஏற்ற இனிமையான குரல் வளம் உள்ள ஆளை வீட்டுக்குள் வைத்துக் கொண்டு 'ஏனடா இதுவரை பயன் படுத்தாமல் இருக்கிறாய்" என்று உரிமையுடன் கண்டித்து அங்கலாய்த்த முதல் அபிமானி கிறகெறி அண்ணன் தான். எனது மனைவியிடமும் சொல்லி புலகாங்கிதப்படுவார். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் இசை ஞானத்தை துல்லியமாக எடைபோடும் அவருடைய கெட்டிக்காரத்தனத்துக்கு இது ஒரு துளி இல்லையா?

ஏதென்ஸ் நகரம் தொடங்கி தனது ஆளுமைக்கு கீழ்படிந்த நாடுகள் அனைத்திலும் மாவீரன் அலெக்ஸாண்டர் நிறுவிய கிரேக்க சிற்பங்களும் இலக்கிய படைப்புக்களும் கலாச்சார பிரதி பலிப்பும் இன்னமும் அழியாது பரந்து கிடப்பதாகவே படித்திருக்கிறேன். அதுபோல யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த கிறகெறி என்ற கலைப்புயல் ஐரோப்பிய கண்டம் வரைக்கும் தனது கலை பாதிப்பை ஏற்படுத்தி தமிழர்களின் வரலாற்று பொக்கிஷத்துடன் என்றும் மறையாத காவியமாக ஐக்கியமாகிவிட்டது என்பதை எவரும் மறுக்கவோ இல்லாவிடின் மழுப்பவோ முடியாதபடி காவிய நாயகனாக ஆக்கியது காலத்தின் கட்டாயம் போலும்!

அமரர் கிறகெறி அண்ணனோடு பேசத் தொடங்கினால் அதில் 99 வீதம் கலை பற்றிய சமாச்சாரம் தான். நமக்கு தெரிந்தளவில் ஒரு கலைஞனுக்கு ஆண்டவன் அனைத்து ஆற்றலையும் இலகுவில் அள்ளிக் கொடுத்து விடமாட்டான். இந்த வரப்பிரசாதம் ஒரு சிலரே அபூர்வமாக அமையும் சித்தம் உடையவராக காணப்படுவர். குறிப்பாக இந்தக் கொடை பெற்ற கலைஞர் வரிசையில் அவர் பெயரும் அடங்கியது தெய்வச் செயல் என்பதே எனது அபிப்பிராயம்.

படிப்பகம்

www.padippakam.com

மறைந்த கிறகெறி அண்ணன் நறுக்குத் தெறித்த மாதிரி இயல், இசை, நாடகம், நாட்டுக்கூத்து அனைத்தையும் ஒருங்கே அவர் வசம் நிரப்பி, கலைத் தாயின் பிரதிநிதியாக விடாமுயற்சியுடன் கலைப்பணியாற்றியதில் எது வித ஆச்சர்யமும் இல்லை என்றே அடித்துக் கூறலாம். அவர் மக்களால் உத்தரவாதம் பெற்ற கலைச்சேவகர் என்பது சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை.

அவருடைய கண்களுக்கு ஒரு காந்த சக்தி உண்டு. அந்தக் கண்களால் ஒரு பார்வை கூர்ந்து பார்த்தால் போதும். அந்த நோக்கில் இரண்டு வித அர்த்தம் குடிகொண்டிருக்கும். ஒன்று, 'நீ எப்படி நலமா?" என்பது போன்ற கேள்வி! அடுத்தது, 'அட... நீ செய்தது நியாயமா? என்பது போன்றது. சற்று அருகில் நெருங்கி 'என்ன அண்ணே பார்வை ஒரு தினுசு மாதிரி இருக்குது" என்று கேட்டால் மேலே கூறிய விவரத்தில் ஒன்றாகத் தானிருக்கும். கலைஞர்களின் விழிப் பேச்சுக்கு மறுபேச்சு ஏது? ஆகையால் தான் மனதினுடைய ஜன்னல்கள் தான் கண்கள் என்று கூறினாரோ? நாடகத்துறை வித்தகர் சேக்ஸ்பியர்.

அருள்மாஸ்ரருடைய (அருந்ததி) 'முகம்" எனும் படம் வெளிவந்து சில நாள் கழித்து தமிழ்க் கடைத் தெருவில் வைத்து கிறகெறி அண்ணனிடம் கேட்டேன் 'உங்களின் வீடியோ படம் எந்தளவில் இருக்கு?" என. அவரும் சிறிதும் சளைக்காமல் என் தோள் மீது கைபோட்டு அதடாப்பா அருந்ததி முகம் என்கிற வீடியோ படத்தின் மூலம் எங்களுக்கெல்லாம் ஒரு அந்தஸ்தைத் தேடித்தந்து விட்டான். ஆனபடியால் இனி நாங்கள் எசகு பிசகா ஏதும் வில்லங்கம் பண்ணி, அவனுடைய உழைப்பை வீணடிக்கக்கூடாது பாரு! அதனால மறுபடியும் திருப்பி தரமான அவதானத்துடன் எடுக்கவேண்டி இருக்கடாப்பா! என்றார் நிதானமாக. அப்படி என்றால் மீண்டும் செலவாகுமே என்கிற எனது கேள்விக்கு, 'அதுக்காக கண்டபடி படம் பிடித்து எனது முகத்தில் கரி பூச நீ ஆசைப்படுகிறாயா? என போட்டார் ஒரு போடு! அதுதான் கிறகெறி அண்ணன்.

மனித சமுதாய சிந்தனையில் புது வித பரிமாண வளர்ச்சியை ஏற்படுத்த வல்லதாக கலை இருக்க வேண்டும் என்பது நாடக மேதைகளில் ஒருவரான பெர்னாட்ஷாவின் கருத்து. அப்படிப் பார்க்கப்போனால், கலைஞர்களுக்கு மன நல மருத்துவ சிகிச்சை நிபுணர்கள் என்னும் ஒரு வித தனிச் சிறப்புக்களும் உண்டு. காரணம், ஒரு நாள்பூராவும் ஓடி ஆடி உழைத்து பலவித மன உழைச்சல்களுடன் திரைஅரங்குகளை நாடி கழைப்புடன் வரும் பாமரனையும் சில மணிநேரத்திற்கு களிப்புடன், மெய் மறந்து குதூகலமாய் நெகிழ வைக்கும் சாதுர்யம் அறிந்தவன் கலை விஞ்ஞானி என்பதால்! இந்த அடிப்படையில் கிறகெறி அண்ணனுடைய பரிணாம கலைத்துறை

படிப்பகம்

வாழ்க்கையின் பதிவுகளைக் கொஞ்சம் நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், 'கலைக்கோயில்" என்னும் நிறுவனத்தை சொந்தமாக நிர்மாணித்து, அதன் வாயிலாக தயாரிப்பு, இயக்கம், நடிப்பு, பாட்டு, நாட்டுக்கூத்து, நாடகம் என்ற தகுதியுடன் தன்னை மேலும் அடையாளம் காட்டி அரிய காரியங்களைக் கூட எளிதாக சாதித்து நிருபணமாக்கிட புறப்பட்டவர் கிறகெறி அண்ணன்.

அடிக்கடி கிறகெறி அண்ணன் சொல்லுவார் 'அட... கலைஞர்கள் உயிரோடு உலவும்போதே, அவரவர் தராதரத்துக்குத் தகுந்த விதத்தில் தகுதியான பட்டம் பரிசுகளைக் கொடுத்து மேலும் மேலும் உற்சாகப்படுத்துங்கடாப்பா! தரமான கலைஞர்கள் இறந்தபின்னர் வீட்டு வாசல் தேடி பட்டமும் பரிசுகளும் போய் என்ன பிரயோசனம்? அல்லது பத்திரிகையில் சும்மா ஒப்பாரி வைத்துத்தான் என்ன பயன்? என்பார். அதன்படி பார்த்தால் அமரராகுமுன் கிறகெறி அண்ணனுக்கு சூடப்பட்ட நடிப்பிசைக் காவலன், கலைஞானி, கானக்குயில் போன்ற பட்டங்கள் அனைத்தும் கலைத்துறையில் அயராது ஈடுபாடு கொண்டு முக்கிய பங்கு வகித்த உன்னதமான பிறவிக் கலைஞனுக்குசூடிய மணி மகுடம் என்பதில் சிறிதும் ஐயம் கிடையாது என்பது எனது முடிவு.

திறமை உள்ளவர்களை நோக்கி அதிஷ்டம் வலிய வரவேண்டுமே தவிர கெஞ்சி வழிந்து அலைந்து திரிந்து தனித் தன்மையை வீணடிக்கக்கூடாது என்பதோடு எங்கே திருப்தியான வாய்ப்புக் கிடைக்குதோ அங்கே நமது வித்தையைக் காட்டத் தவறக்கூடாது எனவும் தன்னம்பிக்கையுடன் சொல்வார். அதாவது மதிப்புள்ள இடத்தில் தான் உண்மைக்கலைஞனுக்கு மவுசு என இயல்பான தனது வார்த்தைகளால் எடுத்து விபரமாக விளக்கம் தருவார். கலையின் மீது அளவற்ற மரியாதை, மதிப்புக் கொண்டுள்ள கலைத் துறை சார்ந்தவர்களை ஒரு பொருட்டாகக் கருதி அவ்வளவு அக்கறை காட்டுவது இல்லை என்பது மாத்திரம் வாஸ்தவம் தானே?

அதிக பட்சம் கலையையே சுவாசித்து குறிப்பாக நாட்டுக்கூத்தை முக்கியத்துவமாக்கி அதுக்கு வடிவம் கொடுத்து மெருகூட்டியவர். அவர் வசம் முதற் தரமுத்திரையாக மிளிர்ந்தது நாட்டுக்கூத்துத்தான் என்பது பல்வேறு தரப்பாரின் குறிப்பு. எதுவித நஷ்டத்தையும் பொருட்படுத்தாது தனது கையை விட்டு கலை நழுவிடாது கெட்டியாகத் தழுவிக்கொண்டு உணர்ச்சிப் பெருக்கால் மிகவும் சூடாக நிறைய அற்புதங்கள் செய்ய வேணும் என்ற துடிப்போடிருந்தார். அவர் கை நிறைய பொருளாதாரத்தை சம்பாதித்து வைத்திருந்தாரா என்பது கேள்விக் குறியாக இருந்தாலும் 'நாட்டுக்கூத்தா அழையுங்கள் கிறகெறியை" என்ற நற்பெயரை இறுதி மூச்சு வரை தக்க வைத்திருந்தார்.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது" என்பது போல, கதாபாத்திரத்துக்கு

www.padippakam.com

தகுதியான கலைஞர்களை தேர்வு பண்ணி கணிசமான அளவு அந்தக் கலைஞர்களிடத்தில் தனக்குத் திருப்தி வரும் வரைக்கும் சிறிதும் சளைக்காது வேலைவாங்குவதில் நிதமும் குறிப்பாக இருந்தவர். எது எப்படியோ தனது கற்பனை வளத்திற்கு உரமூட்டி சிக்கல்களைத் தவிர்த்து ஆனந்தக் கூத்தாடிய ஒப்பற்ற நாட்டுக்கூத்துப் பித்தர். அதாவது 'கோழிக்கு குஞ்சாகப் பிறந்தா குப்பை கிளறித்தானாகவேண்டும்" என சதா கலை... கலை... என்பதையே மூச்சு விடாப் பேச்சாகக் கொண்ட கலைத் தொண்டர் அவர்.

கலை உலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட 'கலைச் சிகரம்" அமரர் கிறகெறி அண்ணன் என்ற பிறவிக் கலைஞர்
தனது பல துறை வல்லமையால் மக்களின் கவனத்தை தன்பால் ஈர்த்து சலிப்புக்களையும் களைப்புக்களையும் மெய்மறந்து எல்லோரும் லயிக்கும் வண்ணம் பரவசப்படுத்திய கலைத்துறையில் அவர் நாமம் மங்காது என்பது திடம்! அவர் விட்டுச்சென்ற அளப்பரிய பணியை மேலும் பூர்த்தி செய்து காலத்தின் தேவை கருதி கலை வடிவங்களுக்கு புதுப் புது மெருகேற்றி சுவைபட ஊக்கப்படுத்துவது தான் அமரருக்கு நாம் செய்யும் ஆத்மாத்தமான அஞ்சலியாகும் என்பதே எனது பணிவான விண்ணப்பம். இதனை ஏற்று இவ் அரும்பணியை எமது சமுதாயம் செய்யுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்ப்போமே! அதாவது கோடரியின் குணம் மரம் வெட்டினால் தானே தெரியவருமில்லையா?

எனது கணிப்பு கச்சிதமாக இருக்குமாயின் அமரர் கிறகெறி அண்ணர் கடைசியாக அணிவித்த தங்கப்பதக்கம் கூட அவருடைய சக நண்பராகிய 'ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் சங்க" ஸ்தாபகரும், நாடக ஆசிரியருமான அன்பிற்குரிய அரியநாயகம் அண்ணர்க்கே! அந்தக் காட்சியைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றவர்களில் அடியேனும் ஒருவன் என்பதைப் பணிவுடன் சொல்வதில் பெருமை அடைகிறேன்.

இறுதியாக எனது கருத்திலிருந்து அன்பான சிறு துளிகள், கிறகெறி அண்ணருடன் எனக்கிருந்த பாசக் கூட்டினை விலாவாரியாக சொல்லிக்கொண்டே போனால் ஒரு தனிப் புத்தகமே எழுதி விடலாம், ஆகையால் முடிந்தவரை எண்ணி எண்ணி சொல்லக் கூடியதை ஒரு அளவே எடுத்துக் கூறியுள்ளேன். கைவசம் ஏராளமுண்டு இன்னும் எழுதுவதற்கு! ஆனால் அவசரம் காரணமாக சுருக்கமாகப் புலம்பியுள்ளேன். இன்னுமொரு சமயத்தில் மீதியை கக்கித் தள்ளுவேன் எனும் நம்பிக்கையுடன் எழுத்துத் துறை அங்கத்தவன் என்னும் முறையில் எனது சுய விருப்பமாக 'கலைச்சிகரம்" என்கின்ற திரு நாமத்தை அமரர் கிறகெறி அண்ணர்க்கு சூட்டி நீங்காத நினைவுகளுடன் தற்போதைக்கு விடைபெறுகின்றேன்!.

பாரீஸ் கே.கணேசமூர்த்தி

படிப்பகம்

www.padippakam.com

# தங்கராசா இறந்த செய்தியை ஜீரணிக்க முடியவில்லை

கலைஞர் கிறகெறி தங்கராசா இறந்த செய்தியை இன்னமும் என்னால் நம்ப முடியவில்லை. நம்பமுடியவில்லை என்பதை விட ஜீரணிக்க முடியவில்லை என்பதே சரியாக இருக்கும்.

இறப்பு மனித வாழ்வின் தவிர்க்க முடியாதது என்பது எல்லோருக்கும் புரிந்தது தான். ஆனாலும் அதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. அதிலும் சராசரி மனிதனை விட சாதனைகள் படைத்த ஒருவரின் மரணம் அதுவும் இன்னும் பல சாதிக்கக் கூடிய ஒருவரின் இழப்பு திகைப்பையும் துயரத்தையும் தான் தருகிறது.

பிராங்பேர்ட் தமிழ்மன்ற 1998 கலைநிகழ்வின் வைரமுத்து அரங்கில் அரிச்சந்திர மயான காண்டத்தை அப்படியே ஒப்புவித்த கிறகெறி அவர்களுக்கு பாரிசிலிருந்து வந்திருந்த எம். அரியநாயகம் முதல் பரிசை தமிழ் மன்றம் சார்பில் வழங்கிய நிகழ்வு இன்னும் நினைவில் நிற்கிறது.

அந்த வகையில் நம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய கிறகெறி தங்கராசா இறந்த அந்த நிமிடத்திலிருந்து இதை நான் எழுதும் இந்த நிமிடம் வரை நான் சந்தித்த கலைஞர்கள், நண்பர்கள், உறவினர்கள் எல்லோருமே இன்னமும் திகைப்பிலிருந்து வருத்தத்திலிருந்து மீளவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

ஒரு பல்கலை வல்லவனாகத் திகழ்ந்த திரு. கிறகெறி தங்கராசாவின் இழப்பு கலைக்கும் கலைஞர்களுக்கும் ரசிகர்களுக்கும் தமிழுக்கும் தமிழ் மண்ணிற்கும் பேரிழப்பேயாகும்.

அவர் பல கனவுகளுடன் வாழ்ந்தவர். கலையை நேசிப்பவர்கள், கலையைக் காப்பவர்கள், கலையை ஆராதிப்பவர்கள் எல்லோருமே ஒன்று சேர்ந்து அவர் கனவுகளை நனவாக்க உழைக்க வேண்டும்.

கலைஞர்களை வாழும்போதே கௌரவிக்க வேண்டும் என்பதற்காக 'கலைக் கோயில்" கண்ட அப்பெருங் கலைஞனின் கலைப் பற்றை தொடர்ந்து வளர்ப்போம். இதுவே அவருக்கும் கலைக்கும் நாம் செய்யும் பேருதவியாகும். அவர் கலைகள் என்றும் வாழும். வாழ்க கிறகெறி தங்கராசாவின் நாமம்.

பிராங்பேர்ட் சொர்ணலிங்கம்

படிப்பகம்

www.padippakam.com

# முன்னணிக் கலைஞனை இழந்தோம்!

திருமறைக்கலாமன்றத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட கலைஞர்களின் வரிசையில் அமரர் திரு. கிறகெறி தங்கராஜா அவர்களின் பங்கு போற்றுதற்குரியதாகும். அவரது மறைவு கலைத்தாய்க்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும். தனது வாழ்வின் முழுமூச்சையும் கலைக்காக அர்ப்பணித்து தன்னை ஓர் நல்ல நடிகனாக, இனிய குரல்வளம் பெற்ற இசைக்கலைஞனாக தமிழ் உலகுக்கு இனம்காட்டிறு முத்தமிழ் கலையை வளர்க்க தமிழ் ஈழத்தில் மாத்திரமல்ல, புலம்பெயர் மண்ணிலும் இறக்கும்வரை பாடுபட்டு உழைத்த கலைஞானி, வளரும் கலைஞர்களை ஊக்குவித்து, அவர்கள் தன்னைப்போலவே கலைக்காக உழைக்கவேண்டுமென எண்ணி அவர்களுக்கு பட்டங்கள் பதக்கங்கள் வழங்கி கலைஞர்களின் மதிப்பை சமூகத்தின் மத்தியில் உயர்த்தப் பாடுபட்ட கலைவள்ளல். எமது மன்றத்தின் முப்பத்தைந்து வருட வரலாற்றில் 30 வருடங்களை தனது பங்களிப்பால் நிரப்பி, எமது கலைப்படைப்புகளின் உயர்ந்த கலைத்தரம் பேணப்படவும், நல்ல சமூகநலக் கருத்துகள் மக்கள் மத்தியில் சென்றடையவும் தூணாக நிமிர்ந்து நின்றுழைத்த கலைக்காவலன்.

மரணம் உன் உயிரைப்பறித்தாலும் - உன்
கலை வாழ்வின் மூச்சு மரணிக்கவில்லை
நீ விட்டுச்சென்ற கலைப்பணியை - உன்
இனிய நினைவோடு தொடர்வோம்.

உன் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் உறவினர்களோடு
நாமும் கலக்கிறோம்.

திருமறைக்கலாமன்றம்
பிரெஞ்சுக்கிளை



படிப்பகம்

www.padippakam.com

# திருமறைக்கலா மன்றம்

திருமறைக்கலா மன்றத்தின் ஆரம்ப உறுப்பினர்களில் ஒருவரான திரு. கிறகெறி தங்கராஜா இறைவனடி எய்திய செய்திகேட்டு நானும் மன்ற உறுப்பினர்களும் ஆழ்ந்த துயரமடைந்தோம். அவர் தன் வாழ்நாளில் மன்றத்தில் நடித்தும் இசை நிகழ்வுகளில் பங்குபற்றியும் கலையுலகில் தமக்கெனத் தனியிடத்தைப் பிடித்திருந்தார். அன்னாரின் இழப்பு பிரான்சில் புலம்பெயர்ந்து வாழும் கலை உள்ளங்களுக்கு பெரும் இடைவெளியாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினர், உறவினர், நண்பர்களோடு நாமும் இணைகிறோம்.

'வாழ்வு மாறுபடுகிறதேயொழிய எடுபடுவதில்லை"
அன்புடன்
நீ. மரியசேவியர் அடிகள்
இயக்குனர்

# நம்ப முடியவில்லை

அண்ணனே!

எனது உழைப்பிலும் உயர்விலும் அக்கறையோடு கவனித்து மகிழ்ச்சி கொண்ட எனது உடன்பிறவா அண்ணனே! தைத்திங்கள் நான்காம் திகதியும் என்னோடு உரையாடி விட்டுச் சென்ற எனது உதிரமே நம்ப முடியவில்லை!

அண்ணனே!

நீர் மறைந்து விட்டீர் என்று வரும் செய்தியை என்னால் நம்பமுடியவில்லை. இந்த உலகத்தில் காற்று இல்லை! மழை இல்லை! நீர் இல்லை! என்பதை நாங்கள் நம்புவோமானால் கிறகெறி என்ற எனது நண்பன் மறைந்து விட்டதை நாங்கள் நம்பலாம்.
அது வரையில்
நீர் மறைந்து விட்டதை என்னால் நம்ப முடியவில்லை...

நேசத்துடன்
அ.ராகுலன் குடும்பம்
றோயல் உணவகம்

படிப்பகம்

www.padippakam.com

# முழுமையான கலைஞன்

முழுமையான கலைஞன் இவன். பேச்சால், மூச்சால், சிந்தனையால், செயற்பாட்டால் ஒரு முழுமையான கலைஞனாக வாழ்ந்தவர் அமரராகிவிட்ட கிறகெறி தங்கராசா அவர்கள்.

கலைச்சேவையில் தன்னை மறந்தவன்! ஏன்? கரைத்தவர் என்று கூடச் சொல்லலாம். 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கூற்றுக்கு இயங்க, இலைமறை காய்களாக இருந்த எத்தனையோ கலைஞர்களை இனம்கண்டு அவர்களை வெளிக்கொணர்ந்து - உரிய சந்தர்ப்பங்களை அளித்து அவர்களை முன்னணிக் கலைஞர்களாக மக்கள் மத்தியில் வளம்பெறச் செய்தவர் அமரர் தங்கராசா அவர்கள்.

நாடகங்களின் பாத்திரங்களை ஏற்று சிலர் நடிக்கிறார்கள். அவர்கள் நடிகர்கள் மட்டுமே. சிலர் பாத்திரமாகவே மாறி மக்கள் மத்தியில் நீங்காத நினைவலைகளுடன் நிற்பவர்கள் ஒரு சிலர் மட்டுமே. அதற்குரியவர் எங்கள் தங்கராசா! இல்லை மக்கள் கலைஞர் தங்கராசாவும் ஒருவர்.

ஊர்நடுவே நிழல் கொடுத்து நின்ற ஆலமரம் சரிந்ததுபோல் அமரர் தங்கராசாவின் மறைவும் கலைத்துறையில் வெற்றிடத்தை ஏற்படுத்திவிட்டதென்றே கூறவேண்டும்.

அவரின் குடும்பத்தினரின் துயரத்தில் நானும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கிறேன்.

சி. காராளபிள்ளை
(ஸ்தாபகாப்பாளர் - பாரிஸ் கல்வி நிலையம்)



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ் மன்றம்

## TAMIL MANTRAM e.V.

**(Kultur und Sport)**

**பிராங்பேர்ட் - FRANKFURT**

Postfach 102125,
60021 Frankfurt/M,
Germany.

Reg. Nr. - 9746.
Konto Nr. - 6804967.
Commerz Bank (BLZ 500 400 00)

# கலை மாமலை சரிந்ததுவோ

கலை உலகின் வழிகாட்டியாக ஈழ மண்ணில் உதித்த எம் பெரும் கலைஞன் கிறகெறி தங்கராஜாவின் பிரிவால் பிராங்பேட் தமிழ் மன்றம் மட்டுமல்ல உலக வாழ் தமிழ் மக்கள் அனைவருமே வேதனையால் துடிக்கின்றோம்.

கிறகெறி தங்கராஜாவை நேரடியாகத் தெரியாவிட்டாலும் அம்மாபெரும் கலைஞனை அறியாதார் உலகில் எவரும் இல்லை என்றே கூறலாம். அக்கலைஞனின் கால் பதிந்த எம் பிராங்பேட் தமிழ் மன்றம் இன்னும் பெருமை அடைந்ததென்றே கூறவேண்டும். 29.08.1998 அன்று பிராங்பேட் தமிழ் மன்றத்தினால் நடிகமணி வி.வி.வைரமுத்து அரங்கில் நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சியின் போது நடிகமணி வைரமுத்தே உயிர்பெற்று வந்து நடித்தாற்போன்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தி எங்கள் மனதில் ஆழப்பதிந்த மாபெரும் கலைஞனின் இவ்விழப்பு ஈடுசெய்ய முடியாததொன்றே. இம்மாபெரும் கலைஞனை இழந்து தவிக்கும் கலை உலகிற்கு, அதிலும் குறிப்பாக உலகம் வாழ் தமிழ் மக்களுக்கு என்னதான் ஆறுதல் கூறினாலும் அவரது நடிப்புத் திறமைகள் மனக்கண்ணில் தோன்றி வேதனையூட்டத்தான் செய்கின்றன. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பா. பாலசுப்பிரமணியம்
தலைவர்
தமிழ் மன்றம் - பிராங்பேட்
பா.பாலசுப்பிரமணியம்



படிப்பகம்

www.padippakam.com

# நீ நிரந்தரமானவன்

மனிதனை மகிழ்விப்பதற்காக பிறந்தது தான் கலை
மனித மனதை வசீகரிக்கும் வல்லமை பெற்றது கலை
மனிதன் தன் துயரங்களை மறந்து வாழ்க்கையை ரசிக்க வைப்பது கலை
மனம் வாக்குக் காயம் என மூன்றையும் ஒருமைப் படுத்திப் படைப்பது தான் கலை
தான் கண்டவற்றை
தான் ரசித்த வற்றை
தன் நல்ல கருத்துக்களை
தன் சமூக வளர்ச்சிக்கு
தன் மொழியின் சிறப்புக்கு
தன் உழைப்பால் உவகூட்டுவது தான் கலை
மனித வாழ்க்கையில் முக்கியமாகி விட்ட கலையை
மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாததாகி விட்ட கலையை
மனித நேயத்துக்கு நுழைவாசலான கலையை
மனித மனங்களை புடம் போடும் கலையை
உன் உயிராக
உன் சுவாசமாக எண்ணி
செயல்பட்டு உழைத்து
மகிழ்வித்து மகிழ்ந்து
நம்மையெல்லாம் மயக்கி வாழ்ந்த
கலைமகனே
கிறகெறி தங்கராசனே
எங்கள் கலைப் பொக்கிஷமே
எங்கு சென்றாய்?
கலை என்ற தேனில் எம்மைக் குளிப்பாட்டி
அந்த இன்பத்தில் மகிழ்ந்து மயங்கிக் கிடந்த எம்மை
கண்ணீர் மழையில் தவிக்க விட்டு
கரைசேரத் தெரியாமல் தவிக்க விட்டு
எங்கு சென்றாய் கலைஞனே?
எங்கள் கலைத்தாகம் தீர்க்க
எங்கள் கண்ணீர் துடைக்க
எங்கள் மெய் கட்டித் தழுவ
எங்கள் இதயங்களை உன் வார்த்தைகளால் அர்ச்சிக்க
எங்கள் கலை இளைஞர்களுக்கு வழிகாட்ட
இனியார் மிச்சம்?

ஞானம் பீரிஸ்

படிப்பகம்

www.padippakam.com

# என் ஆருயிர் நண்பன் கிறகெறிக்கு,

வணக்கம்.
அன்பு நண்பா,
உன்னோடெல்லாம் நிறைய நிறையவே கதைக்க ஆசையாக இருக்கிறது. மனம்விட்டு
ஓ வென்று கத்திஅழவேணும் போலிருக்கிறது. வருவாயாடா?

சின்னவயசிலிருந்தே தவழ்ந்து எழுந்து விளையாடும் போதிருந்தே ஒருவரானோம். பின்னர் விளையாட்டு, ஆட்டம் பாட்டு நாடகம் என நாம் இறுக்கமானோம்.

கிறெகரி உனக்கு நினைவிருக்கிறதா?
எங்கள் அயல் தென்னந்தோட்ட வளவில் கிறிக்கற் விளையாடுவோம். விளையாடி முடிய கூடியிருந்து வம்பளப்போம். நான் மேளம் அடிப்பேன். நீ பாடுவாய். எங்களுக்கு நேரம் போவது தெரியாது. எனது ஐயா பூவரசம் தடியுடனும், உனது அம்மா புளியந்தடியுடனும் எம்மைத் தேடிவருவதையெல்லாம் நினைக்க உனக்கு சிரிப்பாய் இல்லை.
எனக்கு அழுகை அழுகையாய் வருகுதடா!

உனது அம்மாவின் அருமந்த சேலைகள் எத்தனையை பாழாக்கினாய்! மேடைக்கு சைறதட்டிபோல் கட்டிவிட்டு, திறீறோஸ் சிகரெட் பெட்டியில் ரிக்கற்வெட்டி விற்று நாடகம் போட்டு எத்தனை கூத்தாடினோம்!
உன்னுடைய உற்சாகத்தை பார்த்த ஐயாஅண்ணன் போன்ற பெரியவர்கள் என்னுடைய ஐயாவிடம் சீன், தட்டிகள் வாங்கித்தந்து உன்னை நாடகம் போடவைத்ததையெல்லாம் மறக்கமுடியுமா!

எங்கட மத்தியூஸ் றோட் வயல்வெளிக்குள் செல்லத்தம்பி அவர்களுடைய ஹீஉடைபடா முத்திரை, என்ற நாட்டுக்கூத்து தொடர்ந்து மூன்று கிழமை மேடையேறியது. நானும் நீயும் ஒருநாள் கூத்துக்கு போகிறோம் என்று சொல்லிவிட்டு வின்சர் தியேட்டரில் ராஜபக்தி செக்கன்ஷோ படத்திற்கு போனதை நினைக்க மனம் ஏங்குதடா!

யாழ்ப்பாணம், வன்னி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, நீர்கொழும்பு, திருச்சி, பாரிஸ், ஜேர்மனி என கலை உலகில் நாங்கள் எவ்வளவு அன்னியோன்யமாக பயணங்கள் செய்தோம். எத்தனை துன்பங்கள், எத்தனை இடர்கள் எத்தனை சோதனைகள் எல்லாம் கலைமேல் இருந்த காதலால் மறந்தோம். திரும்பத் திரும்ப நினைவூட்ட

www.padippakam.com

எவ்வளவு இனிமையாய் எவ்வளவு ஏக்கமாய் இருக்கிறது.
நண்பனே! நீ எனக்கு நண்பனாய், குருவாய், சககலைஞனாய் இன்னும் வார்த்தையில் வடிக்கமுடியாதவனாய் விளங்கினாய். உனது பிரிவு எல்லோரையும் போல எனக்கும் ஒரு சாதாரண பிரிவல்ல.
நண்பனே! இதை நீ மட்டுமே உணர்வாய்.

எங்கள் நாற்பது வருட நட்பில் சிறுவயதிலிருந்தே உன்னோடு இணைபிரியாதிருந்த நான் அற்ப விடயத்திற்காக இறுதி 40நாட்கள் உறவை முறித்துக்கெண்டதை நினைக்க தாங்கமுடியவில்லையடா கிறெகரி.

கிறெகரி உனக்கு இதுவும் நினைவிருக்கும்.
அப்போது எங்களுக்கு 20வயதிருக்கும். ஒருநாள் சிறிய வாய்த்தர்க்கத்தில் உனக்கு அடித்துவிட்டேன். நீயும் போய்விட்டாய். நானும் போய்விட்டேன். ஆனால் வழமைபோல மறுநாள் காலை நித்தரைப்பாயில் வந்து என்னை கட்டிஅணைத்து எழுப்பி வாடா கோயிலுக்குப்போவோம் என்று அழைத்துப்போனாயே!
இப்போ எங்கேயடா போனாய்?
அடேய் கிறெகரி.!

பெஞ்சமின் இம்மானுவேல்
26.01.2000



படிப்பகம்

www.padippakam.com

# மண்வாசனைக் கலைஞர்
# கிறகெறி தங்கராஜா

தாயக மண்ணின் கலைவேர்களின் ஆணிவேரான நாட்டுக்கூத்துக் கலையிலே ஆர்வம் கொண்டு, அந்தத்துறையில் மிக இளம் வயதிலேயே நுழைந்து அதன் நெழிவு சுழிவுகளை அறிந்து அரங்கங்கள் தோறும் பெயர் பெற்று விளங்கிய கலைஞர் டி.கிறகெறி தங்கராஜா

நாட்டுக்கூத்து மேதை பூந்தான் ஜோசெவ் அவர்களின் பாசறையில் வளர்ந்தவர். பின்னாளில் நாட்டுக்கூத்துக் கலையில் ஒரு விருட்சமாய் விளங்கினார். தாயகத்தில் இரமணியம்மாள் இசைக்குழுவிலே பாடகராகவும் பரிணமித்தவர் கிறகெறி தங்கராஜா அவர்கள். புலம் பெயர் வாழ்வில் தனது கலைவாழ்வைத் தொலைத்துவிட்டதாக ஆரம்பகாலத்தில் கருதிக்கொண்ட போதிலும் படிப்படியாக பாரீஸ் நகரிலும் தனது நடிப்பு முத்திரையை பதித்துக்கொண்டார்.

அருந்ததியின் 'பரிணாமம்" அவரை மீண்டும் நாட்டுக்கூத்துக் கலைக்கு இழுத்து வந்தது. இதனை அவரே பல இடங்களில் பல சந்தர்ப்பங்களில் கூறி இருக்கின்றார். இதனைத் தொடர்ந்து பல நாடகங்கள் அவரினால் மேடையேற்றப்பட்டன.

நடிகமணி வி.வி.வைரமுத்து அவர்களுடன் இணைந்து நடித்துப் புகழீட்டிய நடிப்பிசைக் காவலர் டி.கிறகெறி தங்கராஜா அவரின் நினைவாக அந்த அரிச்சந்திர மயான காண்டத்தை பாரீஸிலும் மேடையேற்றி நடித்து (தனியாக அல்ல குடும்பமாக நடித்து) புகழீட்டினார்.

கலைகள் எப்பொழுதும் மக்களுடன் வாழ்ந்துகொண்டிருப்பவை. மக்களுக்கான கலையைப் படைக்கின்ற கலைஞர்களும் என்றென்றும் மக்களுடன் வாழ்ந்துகொண்டே இருப்பார்கள்.

அந்த வகையில்,
நடிகராய் பாடகராய் என்றும் நம் மத்தியில் கலைஞர் டி.கிறகெறி தங்கராஜா வாழ்ந்துகொண்டிருப்பார்.

எஸ்.கே.ராஜென்
(ஒலிபரப்பாளர்)



படிப்பகம்

www.padippakam.com

# காலத்தை சாகடித்த கலைஞன்

இலைகள் கையசைக்க
வானம் மழை தூவ - உன்
பயணம் அசைந்து செல்ல - எம்
கண்கள் கண்ணீர் சொரிந்தன!

இமயம் என்பதெல்லாம் என்ன!
உன்முன்னால் அது வெறும் தூசு!
மலைகூடக் கரைந்து விட
வைத்தது உன் இழுப்பு!

காலம் பதிவு செய்யும் கலைஞன்
வாழும் உலகம் இது!
காலத்தை சாகடித்த கலைஞன்
நீ ஒருவன் தான்!

சிறுவயதில் உனை நானறியேன்- ஆனால்
நாட்கள் உனை என்னருகே வைத்தன!
உனை உன்னியே கவனித்தேன்
கவலைகள் மறைந்த கலைஞன்
கலைக்காக வாழ்ந்த கலைஞன்!
எடுபொருள் படுபொருள்
உள்ளுணர்ந்த கலைஞன்
ஒருவன் உளரேல் அது நீ!

எத்தனை மேடை கண்டாய்
அத்தனையும் உன்வசமாயின!
அதில்
புதுக்கருப்பொருட்கள்- இவ்
யுகத்திற்கு தரமுயன்று- ஒரு
யுகவாதியானாய்!

கிறகெறி
என்ற பதம்
கலையுகத்தை ஆட்கொண்டது!
அவன் வாழ்வில் கண்ட
தேடுபொருள் எல்லாம்- தன்கலைத்
தேடுபொருளுக்கே சொந்தமாயின!



படிப்பகம்

www.padippakam.com

இது கண்டு மகிழ்ந்த கலைஞன் இவன்!
இது உண்மை, உண்மையிலும் உண்மை!

கலை வித்தகம் பேசி
மட்டம் தட்டும் கலைஞர்கள் பலர்- தன்
தலைக்கு முண்டாசு கட்டுவதை
இமயத்துக்கு கட்டுவதான
நினைப்பு வரும் அவருக்கு!
இதையெல்லாம் தகர்த்து
மற்றவனுக்கு முண்டாசு கட்டி மகிழ்ந்து
கலைவளர்த்த பெரும் கலைஞன் இவன்!

குழந்தைக்கு தாலாட்டுப் பாடும் தாய்
தான் எனக் கூச்சல் போடும் உலகில்
பாலூட்டி வளர்க்கவும்
சீராட்டி அழகு படுத்தவும்
தங்கமே என அழைத்து
சங்கம் அமைத்து
கலைஞனை வரவழைத்து
கலைஞனை பாராட்டிய உனை
வாழ்த்தாத நாவும் ஒரு நாவா!

கருகோளங்கள் வேறுபடினும்
கலைக்கோயில் சமைத்து
பாரிசில் நீ தந்த கலைகள்
விழிப்படைய வைத்தனவே!
அத்தோடு இதுவுமொன்றென
கலைக்கோயில் வாசகர் உலகுக்கு
வழிவிட்டவனும் நீயே!

முன்நின்று ஒரு வார்த்தை பேசி
பின்நின்று மறுவார்த்தை பேசும்
கலைவட்டத்துக்குள்
நேர்நின்று வாழும்
நேர்கோட்டு விதிக் கலைஞன் நீ!

எத்தனை சிறப்புக்கள்!
எத்தனை செய்திகள்!
பிறந்தன உன்னிடத்தில்
இருந்தும்



படிப்பகம்

www.padippakam.com

அத்தனையிலும்
உன் மரணத்தில்
ஒரு செய்தி சொன்னாயே!
அதுதான் பெருமை தருகிறது- உனது
புகழைக் கூட்டுகிறது!
கலைஞனே கலங்காதே
உன் மரணத்தின் பின்
உன்னைத் தூக்க
யாருளர் என ஏங்கினாயே..
மனதுக்குள் கலங்கினாயே..
இதோ பார்! திரும்பிப் பார்!
ஒரு பெரும் படையே பவனிவருகிறது,
உன் பெரும் பயணத்தில்
இது எனக்கும் இருக்கும்
கண்டேன் இச்செய்தியை
உன் மரணத்தில்!
விட்டேன் பயத்தை
துணிந்தேன் நானும்
இறப்பதற்கு இன்றே!
ஏனெனில்
பொய்க்காது உன் செய்தி!

கீழ்கரவை பொன்னையன்
(பொன் கலைக்கூடம்)



படிப்பகம்

www.padippakam.com

# சிரம் தாழ்த்தி இதயத்தால் அஞ்சலித்து நிற்கின்றேன்

எடுப்பான குரலில் இனிய தமிழ்ப்பாடல்களை
ஈழ வடபுலத்தின் ஆலய மேடைகளில்
துடிப்பான இளைஞனாய் எழுபதுகளில் கிறகெறி
இசைத்து மகிழ்வித்ததெந்தன் செவிகளிலே இன்னும்
ரீங்காரம் இட்டவண்ணம் அகலாதிருக்குதையா!

ஈழத்தில் நாட்டுக் கூத்து கோமகனாய்- புகழ்பூத்த
பூந்தான் யோசெப்புப் பெரியவரின் மாணவனாய்
இடம் பிடித்து மேடைதனிற் தாளத்தொடு சந்தம்
தப்பாமற் பாடியாடும் திறன்பெற்ற கலைஞனே..

புலம் பெயர் வாழ்க்கைப் போராட்டத்தில் மூழ்கி
முகவரியை இழக்காமல் கலைத் தேனீயாய்
சோர்வு தொலைத்து சுயமுகத்தோடு வாழ்ந்தாயய்யா!
பாடகனாய், நடிகனாய், நாட்டுக்கூத்து அண்ணாவியாய்
பாரிஸ் நகரக் கலையரங்குகளில் மிளிர்ந்த
சீராளன் நீயய்யா கிறகெறி தங்கராஜாவே!

ஆள்வைத்துப் பட்டங்கள் பெறுவோர் மத்தியிலே- சக
கலைஞர் பலருக்கு உந்தன் கைப்பொருள் செலவிட்டு
தங்கப் பதக்கங்கள் வழங்கி, விழாவெடுத்துப் பாராட்டி
மங்காப் புகழ் பெற்ற கலைஞன் நீயய்யா!

மனமெல்லாம் கலையுணர்வு நிரம்பிய கலைஞனே!
நாளெல்லாம் உன்னெண்ணம் கலைபற்றி இருந்ததையா
உன் ஆத்மா சாந்திபெற சிரம்தாழ்த்தி இதயத்தால்
அஞ்சலித்து நிற்கின்றேன் இனிய தோழா கிறகெறியே!

நாச்சிமார் கோயிலடி இராஜன்



படிப்பகம்

www.padippakam.com

# இது சபதம்

மறைந்தான் கலைமேதை இம்மண்ணை விட்டு
பறந்தான் எம்மைவிட்டு விண்ணோடு!
உயிரோடு கண்டவனை உடலமாகக் கண்டோம்!
உடலை சுமந்து சுடலை நோக்கி
ஊர்வலமாய் வந்தோம் - உனக்கு
விடை கொடுக்க வந்த கூட்டம்
எறும்பாய் ஊர்ந்தார்கள்
கண்ணீரில் கரைந்தார்கள்!
கட்டிப் புரண்டார்கள் - மனதை
இரும்பாக்கிக் கொண்டே விடை தந்தோம் உனக்கு

அஞ்சலி புரிந்தவர்கள் நெஞ்சுருக கதறினர்
வஞ்சகமாய் சாவுன்னை தேடிவந்ததனால்
கலங்கிய கலைஞர்களும், புலம்பிய கவிஞர்களும்,
கதறிய மக்களும், வெதும்பிய உறவுகளும்
கலைச் சுடரே! உன் மறைவால் தளர்ந்தே போயினர்

அணைந்தது விளக்கு. அனைவரும் கண்டோம்!
நனைந்திட வைத்தாய் கண்ணீரில் எம்மை!
உனை நினைந்திட என்றோ தங்கப் பதக்கங்கள் தந்தாய்?
உனது பதக்கங்களை மார்பில் சுமந்தோம்!
உன்னை தோளில் சுமந்தோம்!

கலைக்கோயிலின் இறைவா! கலைஞர்களின் தலைவா!
எண்ணற்ற கலைஞர்களை ஜொலிக்க வைத்த காவலனே!
மறைந்தா போனாய்? மடிந்தா போனாய்?
பண்ணாயிருந்தவனே! எந்நாளில் இனி வருவாய்?
நெய்யாக மணந்தவனே! எங்கள் கொய்யாப் பழமே!
பொய்யான புவி வாழ்வில் புகழ் பரப்பி நின்றவனே!
உன்னுடல் மண்ணுக்குள் இன்று அடங்கி போகலாம் - ஆனால்
உன் புகழ் உறங்கிப் போகாது - எம்
கண்ணுக்குள் நிற்பவனே! நெஞ்சுக்குள் நிறைந்தவனே!
விண்ணெட்டும் வகை செய்வோம் உன் புகழை கலை மன்னனே!
விண்ணெட்டும் வகை செய்வோம் உன் புகழை இது சபதம்.

வண்ணை தெய்வம்

படிப்பகம்

www.padippakam.com

# சமதர்மக் கலைஞன் தங்கராசா

மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவனும் மரணத்தை வெல்ல முடியாது. ஒரு நாள் உயிர்த்தெழும் நம்பிக்கையில் வாழ்பவர்கள் கிறிஸ்தவர்கள். உலக வாழ்க்கை மனிதருக்கு ஒரு குறுகிய பயணம் என்பதும் இப்பயணம் வேறு ஜென்மமாகத் தொடரும் என்பதுவும் எல்லா மதத்தைச் சார்ந்தவர்களினதும் நம்பிக்கை. பிரிவைச் சந்திக்கும் போது சகிக்க முடியாதது. கலைஞனாகவும் கிறிஸ்தவனாகவும் எம்முடன் வாழ்ந்த இக்கலைஞனின் பிரிவு பல தமிழ் மக்களை துக்கத்தில் ஆழ்த்தியது. அவர் கலைக்கு செய்த சேவை மிகவும் மகத்தானது, பாராட்டப் படத்தக்கது, என்றுமே மறக்க முடியாதது. ஒரு கலைஞன் உயிரோடு இருக்கும் போது பாராட்டப்பட வேண்டும் என்று இக்கலைஞன் எத்தனையோ மேடைகளில் முழங்கினான். புலம் பெயர்ந்த மண்ணில் பொருளாதாரத் தட்டுப்பாடுகளின் மத்தியில் வாழ்ந்த இக்கலைஞன் தங்கப் பதக்கங்கள் அணிவித்து, பொண்ணாடை போர்த்தி பல கலைஞர்களைக் கௌரவித்தான். பல இளங்கலைஞர்களை உருவாக்கினான். வயதில் குறைந்தவர்களை ""டேய் இங்கை வாடா" எனவும், வயதில் மூத்தவர்களை வெகு மரியாதையோடும் அந்நியோன்னியமாகப் பழகிக் கொள்வான்.

சகோதரத்துவம், சமத்துவத்தை விரும்பி சமதர்மவாதியாக வாழ்ந்து தமிழ்க்கலையை வளர்த்து தமிழ்த்தாய்க்கு தொண்டு செய்து மரணித்த திரு. கிறகொரி தங்கராசா சேவை தமிழ் மக்களின் மனதில் அழியாத ஒரு பதிவாகும். மாபெரும் கலைமாமணி என்றால் மிகையாகாது.

பிரிவால் துயர் கொண்டு கண்ணீர் அஞ்சலி செய்யும்
சகோதரர். இராசநாயகம். யே.
தலைவர்
(சர்வதேச தமிழ்க் கலைஞர்கள், அறிஞர்கள் இணைப்பகம்)



படிப்பகம்

www.padippakam.com

# கண்ணீரால் தலைவணங்குகிறேன்

தமிழ் ஈழத்தில்
யாழ்ப்பாண மண்ணில்
பிறந்தாய்
கலையைப் பிறப்பித்தாய்
வளர்த்தாய்
உன் கலைபோல் பெரிதாக
சிறந்தாய்
புலம் பெயர்ந்தாய்
காலத்தின் கட்டாயமாக
மறந்தாயில்லை உன் கலையை
வந்த மண்ணிலும்
பிறப்பித்தாய்
தமிழ் கலைகள் உலக அரங்கில்
சிறப்பித்தாய்
கலை வளர்ப்பித்தாய்
பல கலைஞர்களைப் பிறப்பித்தாய்
உன் கலை நெஞ்சால்
எம்மை மகிழ்வித்தாய்
பாடினாய்
கூத்தாக ஆடினாய்
தமிழில் வழமான வசன நடை தந்தாய்
வையத்தில் வாழும் கலையெல்லாம் தேடித்தந்தாய்
மேடையில்
வானொலியில்
சின்னத்திரையில் என
உன் வண்ணக் கலை வடிவங்கள் தந்தாய்
நேற்றுப் பிறந்த சாவெனும் புயலால்
பிரித்து விட்டாயே
நேசக் கலைஞனே
தங்கராஜனே
கண்ணீரால் உன் கலைத்துவத்தை
வணங்குகிறேன்

கலைக்காவலர்
சிவனடியான் ஸ்ரீபதி
'இரங்கும் இல்லம்"
ஜேர்மனி

படிப்பகம்

www.padippakam.com

# வீசிய தென்றலும் ஒருகணம் நின்றது

அன்பு நண்பனே! அருமைத் தோழனே!
நாளும் நமைக்கண்டால் நலம்கேட்டு விசாரிப்பாய் - ஒரு
நாளும் சொன்னதில்லை உனக்கேதும் குறையென்று
காலம் வந்ததுவோ காலனிடம் செல்வதற்கு - உன்
கோலம் மறைந்தாலும் குரலோசை மறையாது - தமிழ்
ஈழத்துக் கலைகளுக்காய் இணையில்லாத் தொண்டுசெய்தாய்
ஞாலத்தில் நாட்டிவிட நாடகங்கள் பலசெய்தாய்
நாட்டுக்கூத்துகளும் நல்லபல பணிகளையும்
பாட்டுக்கும் குரல்கொடுத்து பட்டிணமாம் பாரிசில்
கலைக்கோயில் எனநிறுவி கலைகளைநீ வளர்த்தாயே
நிலைக்காமற் போகாது நின்சேவை இந்நாட்டில்
காலத்தால் அழியாது கலைக்கோயில் ஒருபோதும்
ஞாலத்தில் நிலைத்துவிடும் நற்பணியாம் உந்தன்பணி - அன்று
காற்றிடை வந்தது கணீரென போனொலி
தேற்றிட முடியாது திகைத்தது எம்முள்ளம் - உன்
மரணச் செய்தியைக் கேட்டதும் ஒருகணம்
கரணம் போட்டது காதுகள் இருபுறம்
பேசிட வார்த்தைகள் வரவில்லை உதட்டினில்
வீசிய தென்றலும் ஒருகணம் நின்றது
கலை கலையென்று கலைக்காக நீயுழைத்து
நிலையான தூக்கத்தில் நீஆழ்ந்து தூங்குவதா
கலைத்தாய் கலங்குகிறாள் காணும் இனிஉறக்கம்
கலைஞனே எழுந்துவா காணும் இனிஉறக்கம்!

ஸ்ரீ பாரதி அச்சகம்



படிப்பகம்

www.padippakam.com

# தன் மறைவின் பின்னரும் தங்கப்பதக்கம் வழங்க உறுதி கொடுத்த மாமனிதன்

ஈழத்துக் கலைவடிவங்களை குறிப்பாக நாட்டுக் கூத்தை ஐரோப்பிய மண்ணுக்கு அறிமுகப்படுத்தி மெருகூட்டி தாய்நாட்டின் தற்போதைய நிகழ்வுகளை மக்களின் முன் வெளிக்கொணர்ந்த ஓர் கலைஞன், மேலும் நாடகம், பாட்டு, திரைப்படம், கவியரங்கம், என பலவடிவங்களிலும் பிரகாசித்த கலைக்கோயில், அதுமட்டுமல்லாமல் சமூகத்தின் தேவை கருதி தன்னை அர்ப்பணித்த சமூக சேவையாளன்

எமது கல்வி நிலையத்தின் கல்வித்துறை, விளையாட்டுத்துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு கடந்த எட்டு வருடங்களாக தங்கப் பதக்கங்களை வழங்கி ஊக்குவித்த ஓர் சமூக சிந்தனையாளன்

1998ம் ஆண்டு எமது கல்வி நிலைய ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன் கலைக்கோயில் சார்பாக தன் மறைவின் பின்பும் தன் குடும்பத்தினர் தங்கப்பதக்கங்களை வழங்கி தொடர்ந்தும் கல்வி நிலையத்தை ஊக்குவிப்பார்கள் என்று உறுதி மொழி கூறிய முன்னோக்கிய சிந்தனையாளன் இன்று எம் முன் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை,

இது ஓர் இழப்பு மட்டுமல்ல கலைத்துறைக்கும் சமூகத்திற்கும் நிரப்பப்பட முடியாத வெற்றிடமே!

அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களை கல்வி நிலையத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்

பாரீஸ் தமிழர்கல்வி நிலையம்
31 01 2000



படிப்பகம்

# வாழும்போதே வாழ்த்துவோம் கிறகெறி காட்டிய வழிநின்று

கலைஞர் கிறகெறி தங்கராஜாவின் திடீர் மறைவு எம்மால் ஜீரணிக்க முடியாத ஒன்றாக இருக்கின்றது. அந்த மாலைப் பொழுதில் எம்மோடு இருந்து அளவளாவிச் சென்ற மனிதன் மறுநாட்காலை விண்ணுலகு சென்ற செய்தி காற்றோடு பரவி எம் நெஞ்சங்களில் எல்லாம் இடியாய் இறங்கியது.

பூந்தான் ஜோசெப், வி.வி.வைரமுத்து, கிறகெறி,..... அவர்கள் தலைமுறையில் நாம் வாழ்ந்ததற்காக மகிழ்ச்சியடைய வேண்டும். அதே நேரம் ஒரு மனிதன் வாழும் போது அவர்களது திறமைகளை, அவர்களது சிந்தனைகளை ஏன்தான் எம்மால் புரிந்து கொள்ள இயலாமல் இருக்கின்றது. அவர்களது வாழ்நாளில் அவர்களைப் பற்றி உணர முடியாததை, அவர்கள் இறந்த பிறகு நாம் உணர்ந்து கொள்கிறோம்.

நல்லவர்களை நாம் அடையாளம் கண்டு கொள்வதற்காகவே அவர்களுக்கு மரணம் சம்பவிக்கிறது.

வாழ்ந்த நாளில் அவர்களை வசை பாடியவர்கள் கூட, அவர்கள் இறந்த நாளில் அவர்களுடைய நற்பண்புகளை எண்ணிப் பார்க்கிறார்கள்.

அன்றாட நிகழ்ச்சிகளின் மீது ஆத்தரமுற்று அவர்களைத் தாக்கியவர்கள் கூட அவர்களது மொத்தப் பண்புகளை எண்ணி வியக்கிறார்கள்.

'அவர்கள் உலகுக்காகவே வாழ்ந்தவர்கள்" என்பதை எண்ணும் போது 'நாமும் அதுபோல் வாழ வேண்டும்" என்று சிலராவது எண்ணுகிறார்கள்.

வாழ்வியலின் ஒவ்வொரு அங்கத்தையும் தனக்குள் உள்வாங்கி தன் உடல் பொருள் ஆவியை ஒரு நிலைப் படுத்தி நீராய், நெருப்பாய், பூவாய், புலியாய் கணத்துக்குக் கணம் மாறிக் காட்டி எம்மையெல்லாம் பூரிப்பில் ஆழ்த்திய அந்த அற்புதக் கலைஞன் ஒரு கலைஞன் மட்டுமல்ல, நல்ல சமூக சிந்தனையாளனும் கூட.

கிறகெறி தங்கராஜா வாழ்ந்த காலத்தை இதய சுத்தியோடு ஒரு முறை திரும்பிப் பார்த்தால் எம்மிதயம் விம்மி வெடிக்கத்தான் செய்கிறது. அந்தக் கலைஞன் அரங்கிலும் அரங்கிற்கு வெளியிலும் கௌரவித்த அந்த

www.padippakam.com

நல்லுள்ளங்களை ஆராய்ந்து சென்றால் போதும் கிறகெறி தங்கராஜாவின் உள்ளம் எப்படிப்பட்டது என்பதை புரிந்து கொள்ள.

ஒவ்வொரு கலைஞனும், இலக்கியவாதியும், படைப்பாளியும் எப்படி வாழ்ந்தார்கள், அவர்களது திறமைகளை வெளிக்கொணர எவ்வளவு தியாகங்களைப் புரிந்தார்கள், எத்தனை முட்படுக்கைகளை மலர்ப் பஞ்சனைகளாக ஏற்றுக் கொண்டு உலகம் என்ற நாடக மேடையில் தாமும் ஒரு நடிகர்களாக உலா வருகிறார்கள் என்ற இரகசியத்தை அதே மேடையில் ஒரு நடிகனாக இருந்து புரிந்து இனம் கண்டு அவர்களை கௌரவித்தார் என்றால் அது எம் போன்றவர்களுடைய சாதாரண கண்களுக்கு புரியவே புரியாது.

இவர்களையெல்லாம் இனங்கண்ட அந்த கண்ணாடி அல்லது அந்தக் கண்களை என்ன விலை கொடுத்து வாங்கினார் என்பது இறைவனுக்குத் தான் வெளிச்சம்.

அவர் இனம் கண்டு கௌரவிக்கக் காத்திருந்த கலைஞர்கள், அவரால் நேசிக்கப்பட்ட நல்லுள்ளங்கள் இன்னும் ஏராளம்..... ஆனால் அவர்களையெல்லாம் இனம் காணும் சக்தி எவரிடத்தில் உண்டு?

அந்தக் கிறகெறியைப் போன்று பல கலைஞர்கள் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள். அவர்கள் வாழும் காலத்திலேயே நாம் அவர்களை வாழ்த்துவோம் கிறகெறி காட்டிய வழிநின்று..

இயல்வாணன்
ஆசிரியர் 'சுட்டுவிரல்'



படிப்பகம்

# ஏட்டிலே எழுதிவிட்டாய்

கேடுகெட்ட சிங்களத்தின் கெடுபிடியால் நீயன்று
நாடுவிட்டு நாடுவந்தும் நம்கலையை வளர்ப்பதற்காய்
பாடுபட்டாய் பலவழியில் பட்டணமாம் பாரிசில்
ஈடுசெய்ய முடியாது எம்மாலே உன்னிழப்பை
நாட்டிவிட்டாய் கலைக்கோயில் நாமிருக்கும் நாட்டினிலே
கலியுகத்தில் கர்ணன்நீ கானக்குயிலோன் நீ
வலிமையுடன் முன்நின்றாய் வருங்காலச் சந்ததிக்காய்
காட்டிவிட்டாய் கலைவெறியை கலைஞர்களைக் கௌரவித்து
சூட்டிவிட்டாய் புகழ்மாலை சுடர்ஒளியாய்த் திகழ்கின்றாய்
ஏட்டிலே எழுதிவிட்டாய் எம்மக்கள் மனங்களிலே - தமிழீழ
நாட்டிலே மட்டுமல்ல நாம்வாழும் உலகமெல்லாம்!

ஸ்ரீமலர்

# கலையைக் காதலித்தவன்

கலையைக் காதலித்து
கலைஞர்களைக் கௌரவித்து
திறமைக்கு விலைகொடுத்து
தினம் எம்மை நினைக்க வைத்தாய்
தமிழுலகம் உள்ளவரை
தரணியிலே உன்புகழ் வாழும்

'ஸ்ரார் இசைக்குழு"



www.padippakam.com

# அரங்கம் அழுகின்றது!
# மீண்டு வருவாரா அரிச்சந்திரன்?

கலைஞானி கிறகெறி தங்கராஜாவின் இழப்பு ஈழத்தமிழ் இலக்கிய உலகிற்கு ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் கலைப்பணி சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல! அந்த வகையில் அமரரின் 'மயானகாண்டம்" என்ற இசை நாடகம் 13.12.2000 அன்று நடைபெறவிருக்கும் 'வித்தியாலயம் 2000" விழாவில் அரங்கேற்றப்பட விருந்தது. ஆனால் துர் அதிஷ்ட வசமாக 'அரிச்சந்திரன் - கிறகெறி தங்கராஜா" அவர்கள் விண்ணுலகு சென்றுவிட்டார்.

அவருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட அரங்கம் 'மயான காண்டமாக" காட்சியளிக்கின்றது. சக கலைஞர்கள் அரிச்சந்தின் மீண்டு வருவாரா? என்ற ஏக்கத்தில் கலங்கி நிற்கிறார்கள்.

அமரர் கிறகெறி தங்கராஜாவின் பிரிவால் துயருறும் சக கலைஞர்கள், குடும்பத்தார், உற்றார், உறவினர்களோடு அவர்களின் துயரில் பங்கு கொள்வதோடு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்
வேலணை மத்திய மகா வித்தியாலயம்
(பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ் கிளை)



படிப்பகம்

www.padippakam.com

# கலைக்கோவிலின் காவலனே கிறகெறி தங்கராஜாவே!

எமது பதிவில் அந்த மனிதனை சந்தித்த நாட்கள், பேசிய வார்த்தைகளை அசைபோட்டுப்பார்க்கிறோம். மீண்டும், மீண்டும் எம் நினைவலையில், பள்ளிப்பருவத்திலே எம்மைப் பாதித்த கலைஞன். அவர் பத்து வார்த்தைகள் பேசினாலும் அந்த பத்து வரிகளும் கலையைப் பற்றியே இருக்கும். என்ன....... மனிதர் இவர் என்று கூட நினைத்திருக்கிறோம். நலமா?..... என்று எப்போதாவது கேட்டதாக ஞாபகமில்லை. எம்மைச் சந்திக்கும்போது அவர் பேசிய வார்த்தைகளை நினைத்துப்பார்க்கின்றோம். அந்த நாகம் பார்த்தீர்களா?... கூத்தென்றால் இப்படித்தான் பாடவேண்டும். நீ ஏன் பாடவில்லை?... நீ ஏன் நடிக்கவில்லை. இப்படித்தான் அவர் வார்த்தைகள் அமைந்திருக்கும். எப்படி இவ்வளவு ஆழமாகக் கலையை அவரால் நேசிக்க முடிந்தது.

கலைஞனே! உன் மரணம் எம்மை ஒருகணம் உலுப்பி எடுத்தது. கலையின் மேல் இவ்வளவு பித்துக் கொண்டலைந்த மனிதரைச் சந்திக்கவேயில்லை. எமது இதயங்களில் உனது கலைத்தாக விதையை தூவி விட்டு சென்றுள்ளாய் போல் இருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்கு முன் திருமணம், தொட்டு திருவிழா வரை எங்கும் அந்தக் குரல் ஒலித்த வண்ணமே இருக்கும். இன்னும் நினைவிருக்கின்றது. 'ஆனந்தக் கண்ணீர்" என்னும் நாடகத்தில் தனது நடிப்பினால் எவ்வளவோ பாராட்டுக்களை சேர்த்துக் கொண்டார். 'பால சூரன்" என்னும் நாட்டுக் கூத்திலும் முத்திரை பதிக்கத் தவறவில்லை. 'திருப்பாடுகளின் காட்சி" அதிலே பிலாத்துவாத் தோன்றிய அந்த அற்புத நடிப்புகளையும் நாம் மறந்து விடவில்லை. உண்மையில் எல்லாத் திறமையும் ஒருங்கே அமைந்த ஒரு சிறந்த கலைப் பெட்டகம். நீ கலைக்காய் சிந்திய வியர்வைத் துளிகளை நாம் அறிவோம்.

கலைத்தாயின் இனிய மகனே!... என்று சொல்ல நீ தான் பொருத்தமானவன். 'கலைக்கோயில்" மூலமாய் எத்தனை இளம் கலைஞரை வெளிப்படுத்தினாய். கலைத் தாயின் கனவுகளை நிறைவேற்ற எத்தனை துன்பங்களை அனுபவித்தாய். வாழும் போது தான் கலைஞன் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற தூய எண்ணத்தோடு நீ கொடுத்த 'தங்கப் பதக்கங்கள்" மின்னும் பொழுதெல்லாம் உன் முகம் எம் முன்னே வந்து செல்லும். கலைவாழ்வு என்பது போராட்ட வாழ்வு. இந்தப் பயணத்தில் எவ்வளவு துயரங்களை நீ அனுபவித்திருப்பாய். இப்போது நீ அமைதியாக ஓய்வெடுத்துக் கொள். மிகுதிப் பயணத்தை நாம் தொடர்கின்றோம். இறைவனில் என்றும் உன் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

யாழ். சென். றோக்ஸ்
வான்மதிக் கலாலயத்தின் கலைஞர்கள்

படிப்பகம்

www.padippakam.com

# போய் விட்டாயாமே! ஏன் ஐயா?

இனிய நற் கலைஞனே,
ஐய கிறகெறி தங்கராஜா,
போய் விட்டாயாமே! ஏன் ஐயா?

மூத்த செய்தி ஆசிரியர் காசிலிங்கம் ஐயாதான்
தொலைபேசி வழியாக இழவோலை வாசித்தார்
'கிறகெறி தங்கராஜா விஷயமாக" என்றிழுத்தார்
மேடை வாழ் கலைஞனுக்கு,
செய்தித்தாள் கலைஞன் விழாவெடுக்க நினைந்தனனோ
என்றே உள்ளே நினைத்துப் புளகித்தேன்
கேட்டேன்
விஷயம் தெரியாத என் நிலை அறிந்ததும்
விவரம் விளக்கினார்
விக்கித்துப் போனேன்
போய் விட்டாயாமே! ஏன் ஐயா?

செய்தித்தாள், வானொலியில் விவரமாய் வந்ததாம்!
ஒதுங்கி, ஒடுங்கி, மௌனித்து ஓய்ந்தவன்
படிப்பதில்லை! கேட்பதில்லை!
ஆனபடியால் தான்,
உன்னை இழந்து துடிக்கின்ற உறவோடு
துயர் பகிரத் தவறிவிட்டேன்

இனிய நற்கலைஞனே,
உன்னை நான் சந்தித்த முதல் நாளை
இன்று இரை மீட்டுப் பார்க்கிறேன்

இருபத்தியேழு ஆண்டின் முன் ஒரு மாலை!
இலங்கை வானொலி ஒலிப்பதிவு கூடத்தில்
அண்ணாவியார் புகுந்தான் குழுவில் ஓர் இளைஞன்!
ஒவ்வொரு கலைஞனையும்
குரல், சுருதி, தாளம் என்று தரம் உரைத்துப் பார்க்கும் என் முன்
உன் முறை வருகிறது
காற்றை கௌரவித்த காந்தமாய் நாதம் தந்தாய்!
களில் நெடில் பாடியதும் போர்த் தரு பாடுவதே
பொதுவாக எல்லோர்க்கும் வந்த கலை!
புகுந்தான் ஒருவரே களில் நெடில் முடிந்தவுடன்

படிப்பகம்

www.padippakam.com

சந்ததம் வீறாகப் பாடுவதில் வல்லவர், நாடறிய!
அந்த வித்தை உன் நாவில் பிசிறாது அன்று வர,
உன்னையும் உன் ஆசானையும் அணைத்து நான் அகவுகிறேன்!

இன்றதை நினைக்கிறேன்! நெஞ்சு நிறைகின்றேன்!
ஆற்றல் நிறைந்தவனே! போய் விட்டாயாமே! ஏன்?

ஆற்றாமையோடு,

31-01-00

(ஈழக் கூத்தன் - A.C. தாசீசியஸ்)



படிப்பகம்

www.padippakam.com

# இரங்கற்பா

கலைக்கோவிலே இன்று சரிந்ததம்மா...
கலைஞர்களின் இதயம் நின்று துடித்ததம்மா...
கலைஞனே கிறகெறியே நீயே இன்று...
முதன் முதலில் இரங்கற்பா பாடவைத்தாய்...

கலை வாழ வேண்டுமென்று நீ வாழ்ந்தாய்...
'கலையரசன்" என்ற புனை பெயரும் கொண்டாய்...
கலைத் தாகம் கொண்டோர்க்காய் கோவில் தந்தாய்...
காவலனாய் நின்ற நீ எங்கே சென்றாய்?...

கலைகளை ஊக்குவித்து பரிசு தந்தாய்...
கலைஞர்களை இனம் கண்டு மேடைசெய்தாய்...
வாழும்போது கௌரவிக்க வேண்டுமென்றாய்...
சொன்னபடி கௌரவத்தை பலர்க்குச் செய்தாய்...

மயானத்திலரிச் சந்திரனாய் வந்து நின்றாய்...
மனதையெல்லாம் கொள்ளை கொண்டாய், கொண்டு சென்றாய்...
சயனத்தில் இருக்குமிவன் போட்ட வேடம்...
சாகுமட்டும் இருக்கும் அது மறையாதம்மா...

பரதனாய் வந்து நின்று பணிந்தானம்மா...
கலைஞருக்கு சோதரனாய் வாழ்ந்தானம்மா...
வீரனாய் வந்து மேடை அதிர்ந்தானம்மா...
வீரன் தான் என்று தன்னைப் பொறித்தானம்மா...

கண்டியரசனாய் நின்று கர்ச்சித்தானம்மா...
கவிபடித்த அழகில் மனம் சிலிர்த்தானம்மா...
பண்டிதரும் போற்றும் வண்ணம் இருந்தானம்மா...
பாரறிய பூவுலகில் வாழ்ந்தானம்மா...

சங்கிலிய மன்னனாக வந்தானம்மா...
சங்கெடுத்துத் தமிழ் வீரம் சொன்னானம்மா...
பங்கமது வந்திடாது வாழ்ந்தானம்மா...
பாரறியும் உண்மையிது தானேயம்மா...

சவூலாகி நின்று காட்சி தந்தானம்மா...
சாவதற்கு முன்னர்தானே செய்தானம்மா...
போவதற்கா வந்து நின்று குதித்தானம்மா...
போனபின்பு தேடுகிறோம் வருவானா அம்மா... (சவூலாகி 2)
அம்மா... அம்மா... அம்மா...

செபமாலை ஆனந்தன்

படிப்பகம்

www.padippakam.com

# 'கானக் குயிலோன்"

அகவை ஐம்பத்தேழாம் வயதிலடிவைக்கும்
புத்தாயிரத்தில் கலைஞன் கலைக் கண்களை மூடி
கலையாடி உடலைப் பாடையில் சாய்த்து தம்
நிலையாடும் குன்றாய்ப் புகழ் பெருக்கிப் போனானே!

குயில்கள் கூவிய கலைச்சோலையில் உலவி
சோர்விலா இன்ப நிலை வல்லதேனியாகப் பறந்து
மதிவைத்த வானத்தின் கீழிருக்கும் கலைகளை
நிதியெனக் கண்ணுக்குள் வைத்துக் காத்தவனே!

பொய்யூட்டும் தன்மை நெஞ்சில் கலவாது
மெய்யூட்டும் தாலாட்டுப்பாடிய ராஜாவே
நெய்யூட்டிக் கலைத் தீபச் சுடராகி - எம் தமிழர்
நெஞ்சேட்டில் அழியாப் பதிவாகி நிலைத்தவனே!

அமுதெனும் முத்தமிழ் பானம் பருகிய வெறியில்
தனிக்காதல் மனைவி மக்கள் சகலதும் - நான்
துறப்பேன் துறந்தே என்னுயிர்க்கலை வளர்ப்பேன்
என்ற தீரனைப் பிரான்ஸ் மண்ணுக்குள் புதைத்தோமா?

செழித்த கலை நெறிபுகட்டிய நற்றமிழ் தொண்டன்
அற்புத நாடகங்கள் அரங்கேற்றிய கருவூலம்
சிரிப்பில் மிதந்து சிந்தை கவர்ந்தவனே - என்னைக்
கவிஞனென்று பச்சமுடன் அழைத்த மாண்புள்ளமே!

காலையில் உன்னேராக புகழ் பேசிய சிலரெல்லாம்
மாலையில் பின்போகத் திட்டியதை நானறிவேன்
கலைஞானம் இல்லாதவர் வாய்க்கு 'அவல்" அதையே
நான் மாற்றிவைத்தேன் உன் புகழ் பாடிவைத்தேன்!

தலைக்கென்று 'குமணனிடம்" பாடிநின்ற புலவன் போல்
கலைக்கென்று 'உயிர் கொடுத்து" வாழ்வென வாழ்ந்தவனே
முன்னவர்கலை பின்னவர்கலை இயக்கமாக நின்றவனே
என்னிதயக் கலைஞானியே உன்னை வாழ்த்திப் பாடுவேன்!

கிறகெறி நீர் வாழ்ந்த வாழ்வை எண்ணி எண்ணி - எந்தன்
இதயம் இனிக்குது! கண்ணான கலைநிதியே நீதான்
பொன்னான வாழ்வு வாழ்ந்த நடிப்பிசைக் காவலனே
மண்ணோடு கலந்தாயா இல்லை என் கவியோடு நிறைந்தாய்!

கவிஞர் மா.கி.கிறிஸ்ரியன்

www.padippakam.com

# ஏன் மறைந்தாய் குயிலே

கலைக்கு ஒரு மொழியாக
கலைஞனுக்கு ஒரு வழிகாட்டியாக
தமிழ் மணம் பேசும் ஒரு கலைஞனாக
தங்க மனதுக்கு சொந்தக்காரனாக
தான் மட்டும் வாழவேண்டுமென எண்ணாமல்
தரணிவாழ் கலைஞர் எல்லாம் வாழவேண்டும்
கலை வளர வேண்டும்
கலைஞன் சிறக்க வேண்டும்
கலைதான் என் கண்
கலை தான் என் உயிர்
கலை தான் என் மூச்சு
சாகும் போதும் நான் கலை பேசிச் சாகவேண்டும்
என் இறப்பிலும் எனக்கு கலைமாலை விழ வேண்டும்
என்ற தன் மெல்லிய இதயத்தால்
அன்பொழுகும் பேச்சால்
அரவணைக்கும் நெஞ்சத்தால்
ஆரத்தழுவும் நேசக் கரத்தால்
கண்டவர் கேட்டவர்
பார்த்தவர் ரசித்தவர்
எல்லோரையும் வசப்படுத்தியவர்
தங்கமான ராசா
தங்கமான எங்கள் ராசனே
தேன் குரலில் எம் நெஞ்சம் நிறைத்த குயிலே
கிறகெறி தங்கராசனே
ஏன் மறைந்தாய் குயிலே
உன் கலைத்துவத்தை காதலித்த எம்முடன் என்ன ஊடல்
காத்திருக்கிறோம் விரைவில் வா
உன் கலையை மீளத் தா
தமிழ் உன்னை முன் மொழியும்
தமிழர் உன்னை வழிமொழிவார்கள்
தமிழ் நெஞ்சங்கள் உனக்கு சாமரம் வீசும்
வந்து விடு நம்மை மீண்டும் வென்று விடு
உன் இடம் வெற்றிடமாக இருக்கிறது
நீயன்றி இதை நிரப்ப வல்லார் யார்?

குமாரசாமி மகேஸ்வரன்
'குமரன்ஸ்' - லண்டன்

படிப்பகம்

# காலம் எல்லாம் வாழும் ஐயா!
# கலை ஒளியின் காதலையா!

புவி வாழும் வரை வாழும் - தமிழ்க்
கலை வாழும் வரை ...
உன் புகழ் வாழுமே ...
கலைக்கொரு கோயில் செய்தே
கலைஞரை வாழ்த்திச் சென்ற
உன் பெயர் நாளுமே ...

(புவி வாழும் வரை வாழும்)

கிற கெறியே - கலை அரசே ...
கலை மயிலே - கானக் குயிலே
உந்தன் புகழைப் பாடவந்தோம் ...
உந்தன் பெருமை கூற வந்தோம் ...

கலை வழியே புகழ் வாழும்
இசை வழியே பெயர் வாழும்
உந்தன் புகழைப் பாடுகின்றோம்
உந்தன் பெருமை கூறுகின்றோம்

பட்டங்கள் பலதும் கொண்டாய்
பட்டங்கள் பலதும் தந்தாய்
பாச ... கலைஞனே ...
பட்டென்று நெஞ்சில் பட்ட
பாசத்தை வெளியில் சொல்வாய்

நேச நடிகனே ...
கலைஞர்களின் காதலனே ...
கனிந்த இசைப் பாடகனே ...
காலம் எல்லாம் வாழும் ஐயா!
கலை ஒளியின் காதல் ஐயா!

நடிப்பிசையின் காவலனே ...
நடிகமணிச் சாயலனே ...
நாளும் எல்லாம் வாழும் ஐயா!
நாங்கள் கொண்ட காதலையா!

கலை ஒளி

www.padippakam.com

# ஈடுசெய்ய முடியாத இழப்பு

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக கலைவாழ்வில் தன்னைமுற்று முழுதாக ஈடுபடுத்திய ஒரு மாகலைஞனிவர். இவரது தொகையராக்களும் விருத்தங்களும் மக்கள் மனம் மகிழக் கலாதிப் யாகம் பாடுவார் நாட்டுக் கூத்தில். இவருக்கிருந்த ஈடுபாடு அவரது பாடல்களின் மூலமும் ஆடல்களின் மூலமும் தெளிவாகிய உண்மையின் உணர்வின் வெளிப்பாடாகும். தாளம், லயம், சுருதி பிசகாமல் பாடுவதிலும், கோடையிடியாக முழங்குவதிலும் அவதானிக்க முடிந்தது. இசையிலும் எங்களது இசைக்குழுவினரின் மேடைகளை பாகுபாடு, பொறாமை, காப்புணர்ச்சி, தாழ்வு மனப்பான்மை அகற்றி பங்களிப்புச் செய்த கலைஞன். இவரது இழப்பு புலம் பெயர் கலையுலகுக்குப் பேரிழப்பாகும். இவரது கலை ஈடுபாட்டில், பங்களிப்பில் எனக்கிருந்த நெருக்கம் அவரது இழப்பில் மனம் வெடித்துப் பரவி உருகி சுடாகிறது. இறுதியாக எங்களது 25.12.99 சப்தஸ்வரங்களது இசை மேடையில் தான் பாடினார் என்பதை நினைக்க, நினைக்க நெஞ்சம் கனக்கிறது. இந்த நிலையில் அவரது மேடைப்பாடலாக ஒலித்தது 'எங்கே நிம்மதி" பாடலாகும். அத்தகைய உயர்ந்த உள்ளம் கொண்ட கலைச்சுடர் மறைந்தது அனைத்து ஈழத்துக் கலைக்கும் பேரிழப்பாகும். இந்த இழப்பை ஈடுசெய்ய அவரது கலைப்பணியை தொடர்வோம்.

அல்போன்ஸ்

# இளைய நிலாவின் இரங்கல்

இளையநிலாவின் இசையினிலே இன்னிசை படைத்தீர். இனிய உம் குரலால் இதயம் கவர்ந்தீர். இனி எப்போ உம் குரல் கேட்போம் இப்புவியில்..

பாரிஸ்
இளைய நிலா இசைக்குழுவினர்

படிப்பகம்

www.padippakam.com

# கலைக்கும் கலைஞனுக்கும் மரணமில்லை

கலைஞனே!
உன் பேனா மை
தீரும் முன்
உன் உயிர்
நீங்கி விட்டதே.....

ஏய்..... மரணமே
மா மனிதனை
விழுங்கி விட்டாய்
கலைத் தாய்
உன்னை மன்னிக்க மாட்டாள்.....

எம்மை
ஆரத் தழுவி
அணைத்துக் கொண்ட
நல்ல நெஞ்சமே
நீங்கி விட்டாய்
மண்ணை விட்டு
மட்டும் தானே தவிர - எம்
மனதை விட்டல்ல.....

சுற்றும் பூமி
சுற்றும் மட்டும்
சூரியக் கதிர்
சுடும் மட்டும்
கடைசிக்
காற்று இருக்கும் மட்டும்
கலைக்கும்
கலைஞனுக்கும் மரணமில்லை.....

விழுது கலை ஊக்குவிப்பு மன்றம்

படிப்பகம்

www.padippakam.com

# 'கிறகெறி" என்றவோர் கலைஞன்

வாழ்க்கையை கலையாய்,
தொழிலைக் கலையாய்,
துணையைக் கலையாய்,
தன் உறவைக் கலையாய்,
ஏன்...
சுவாசித்த காற்றையே,
கலையாய்க் கொண்டவோர்,
கலைஞர் கிறகெறி தங்கராஜா.

சரியெனப்பட்டதை
என்றும்,
சொல்லிலும் செயலிலும்
நிறுவி,
தன்னிகர் வகையை
நிறுவி,
தனக்கெனவோர்
இடம் பிடித்த கலைஞர்,
கிறகெறி என்பார் உண்மை.

பாத்திரப் படைப்பை
நாளும்,
பயன்தரு பொருளை
பொதித்து,
புலமையொடு நடிகம்
சேர்த்து,
அரங்கினை ஆளும்
கலைஞர் கிறகெறி.

நற்றமிழ் நளினம்
கூட்டி,
நடிப்பொடு சந்தம்
கூட்டி,
நித்திலம் சுரண்டும்
வர்க்கம்,
நயமொடு வாழ்தல்
நீதியோவென்று,
நேரிய பார்வையோடும்
நீதியின் குரலினோடும்
நெஞ்சம் உயர்த்தி
நின்று,



படிப்பகம்

www.padippakam.com

களத்தினில்
நடிகத்தில் குரல் கொடுத்த
கலைஞரே கிறகெறி.

உயர்வினில் பக்கம் சேர்ந்து,
உரிமையின்
வகை கேட்டு
சுதந்திரம் பெற வேண்டி
நடிப்பிசை செயலினூடு
சிந்திக்க வைத்த
கலைஞர் கிறகெறி.

நொந்து போயிருப்பார்
காணின்,
நயம்பட
நல்லதுரைத்து
பொறுமையே கடலினும்
பெரிதென உணர்த்தி,
நியாயத்தின்
கரையில் நின்று,
வாழ்வில்
நீதிமானாய் நின்ற
கலைஞர் கிறகெறி.

நல்லார்க் கிவ்வுலகில்
இல்லையோ இடம்
என்றெண்ணும் நிலை
ஏனோ தானோ.

நல்லதை நாடிய
நெஞ்சம்
நல் கலை படைத்த
உள்ளம்
உலகினில் நிலைத்து,
வாழும் நாமம்
கிறகெறி தங்கராஜா

கலை வடிவமைத்ததால்
கலைக்கோயிலீந்தவர்
கூடியமட்டிலும்
கலைஉள்ளங்கள் மனதினை
விட்டகலாதவர்
கிறகெறி தங்கராஜா.



சிவலிங்கம் சிவபாலன்

www.padippakam.com



அன்புக் கணவனை

பிரிந்து துயருறும் மனையாளுக்கும்,

ஆதரவான நல்ல தந்தையை இழந்து வருந்தும்

பிள்ளைகளுக்கும், மற்றும் இனிய உறவுகளுக்கும்

எமது ஆழ்ந்த அனுதாபத்தை

தெரிவித்துக்கொள்கிறோம்.

கலைஞர்கள் - நண்பர்கள்

படிப்பகம்

www.padippakam.com

அமரர்

கிறகெறி தங்கராஜா

அவர்களின்

'அஞ்சலி நிகழ்வு"

நடைபெற

துணைநின்ற அனைவருக்கும்

'மனங்களில் மரணிக்காதவன்"

அஞ்சலி மலர்

பணியில் பங்களித்த

ஸ்ரீ பாரதி அச்சகம்

'சுட்டுவிரல்"

ஆகியோருக்கும்

எமது

மனமார்ந்த நன்றிகள்!



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்




www.padippakam.com
படிப்பகம்